கடவுள்துணை.

ஸ்ரீமகாபாரதவிலாசம்.

அர்ச்சுனன்தபசு.

தெய்வலோகசரித்திரம்.

இராமச்சந்திரகவிராயரவர்களால்

இயற்றியது.

இஃது

கன்னிபுத்தூர்

வேலாயுதமுதலியாரால்

பார்வையிடப்பட்டு

சென்னை.

கலைக்கியானவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1887

டிசம்பர் மீ

அறிவிப்பு.

இதனால்யாவருக்கு மறிவிப்பது யாதெனில்:— சென்னப்பட்டணம் பெத்துநாயக்கன்பேட்டை கிருஷ்ணப்பநாயக்கன் குளத்துவீதியில் (4) வது நெம்பருள்ள வீட்டில் இருக்கும் கலைக்கியானவிளக்க அச்சுக்கூடத்தில் தமிழ் தெலுங்கு முதலிய புஸ்தகம் தேவையுள்ளவர்கள் விலைசரசமாய் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு
க. கணபதிமுதலியார்

௨

கடவுள்துணை.

ஸ்ரீமகாபாரதவிலாசம்

அர்ச்சுனன்தபசு

விநாயகர்துதி.

காப்பு.

வெண்பா-இராகம்-சங்கராபரணம்.

வீசுபுகழ்விஜயன் மெய்த்தவஞ்செய் திப்புவியில்
பாசுபதம்பெற்றநெறிபாடவே-பேசுமொரு
விக்கினமகற்றிநிறை வித்தையுநற்புத்திதருங்
கக்கரிமுகத்தனருள் காப்பு.

இதுவுமது.

விருத்தம்.

எத்திசைதனிலுங்கீர்த்தி யிலங்கியகுருகுலத்தில்
உத்தமகுணத்தின்மிக்க வுயர்ந்தபாண்டவர்கள்நீதி
சத்தியவிரதனான தனஞ்செயன்றமிழைப்பாட
வித்தகன்சென்னைதர்ம விநாயகன்காப்பதாமே.

இதுவுமது.

திருமருவுதூயமதிகுலத்துதித்திவ்வுலகனைத்துஞ்செங்கோலோச்சும்
குருகுலபாண்டவர்கள்நாயகனர்ச்சுனன்கைலைக்குன்றமேவி
பெருந்தவஞ்செய்தசரித்திரமதையான்றமிழதனிற்பேசவீசன்
மருவுமலைமகள்புதல்வனைந்துகரத்தானைமுகன்மலர்த்தாள்காப்பாம்.

சுப்பிரமணியர்துதி.

விருத்தம்.

ரணியுந்தனஞ்செயன்சந்திரமௌலிதனைக்காணதனதுட்கொண்டு
னிடந்தவமே ர்பூண்டுலகவாஞ்சையைவிட்டேகியன்பாய்

ஆரணியுஞ்சடிலனிடத்தனந்தவரம் பெற்றவருங்காதையோத
நாரணிதன்புகல்வனறுமுகவனிருசெஞ்சரணங்களினங்காப்பாம்

கலைமகள் துதி.

விருத்தம்.

மாநிலமன்னவர்கள் தினப்பரவுபணிமுடிவிளைஜடன்மருவுகின்ற
கானிலமணிட்டசென்று கயிலாசலச்சாரலையடைந்துகாதல்கீத்து
தானிலமற்றெறவையுமித்தைபாமெனவேகழித்தெய்ற்றுந்தபசைப்பாட
ஏனமருப்பிடைமருவுந்தூயமகளைவாணியென்றுவிருந்துகாப்பாம்.

பரமேசுரர் துதி

விருத்தம்.

நறகுணநறசெய்கையிறு லெளியோர்கரும்வலியோர்க்கு
நயமபாலிக்கும்
பற்குணன்மாறுதலைர்வெல்லும்படைவேண்டியருந்தவஞ்செ
ப்புயவிலாத
ஆகரவமாலைபுனைந்தபூமேவிதிபொதுவினட
ஞ பெம்மாற
புகழ்கணைன்பொன்னடியிணையையருச்சித்துப்பூசித்தேன்
முடிமேற்கொள்வாம்.

———(0)(*)(0)———

உமையவள் துதி.

விருத்தம்.

அளிமுரலுஞ்சண்பகப்பூங் குழலுமைகாத்தாயினியா
மலையொண்ணக்க
நவினமலர்ச்சரணியபிராவிந்தனுஞ்சனிநா
ரணிதைபபோற்றி
கிளரவயிரமணிமகுடமணியாசர்பணிசரணக்
கீர்த்திசெய்யு
மிளிர்பதவிலாசமைப் பைந்தமிழாற்மேதினியில்
விளம்புவேனே

மகாவிஷ்ணுதுதி.

—(*)—

சுருதிபலஸ்மிருதியுங்கஸ்தூரிபுனுகொடுபசிய
துளவஞ்சாந்து
மருமஷ்டாக்ஷரமூலமந்திரமுமணக்குமரி
மலர்த்தாள்போற்றி
பலர்புகழ்பார்த்தனருந் தவமியற்றிப்பரமனருட்
படைகள்பெற்ற
சரிதமதைப்புவியிலனை வருமகிழத்தமிழதனாற்
சாற்றுவேனே.

இலக்குமிதுதி.

விருத்தம்.

ஆதிநெடுமாலணியுங் கவுஸ்துவமார்பினிலமர்ந்திவ்
வுலகத்துள்ளோர்
நோதிலமராபதியோ ருலகர்பலதானவர்க்குங்
குறைவிலாற்
போதனதானியசம்பத்தளிக்குமிந்திரையின்பொன்
னடியைப்போற்றி
நீதிகிருட்டிணன்தபசு நாடகத்தைப்பைந்தமிழால்
நிகழ்த்துவேனே.

மங்களம்.

தரு இராகம்-ஆகிரி-அடதாளசாப்பு,

பல்லவி

மங்களம்-மங்களம் செயசுப மங்களம் மங்களம்.

அநுபல்லவி,

மங்களம்வல்லபை மருவுமணாளர்க்கும்
மஞ்ஞையிலேறிவேல்கை வைக்குங்குணாளர்க்கும் (மங்க)

சரணங்கள்.

மதிகதிர்முடியினில் வைத்திடுமையனுக்கும்
வானோர்துயரோட்ட வந்திடுமெய்யனுக்கும்

தியிலுதவிசெய்வா | யென்றநர்வலருக்குந்
தயைகூர்ந்தருள்செய்யுந் | தாயாஞ்சரஸ்வதிக்கும் (ம

மைந்தர்கவலையை | மாய்க்கும்வரைமகட்கும்
ம்காயிஸ்வர்யந்தா | வந்ததிருமடற்கும்
சிந்தையையோர்வழியிற் | செலுத்திபாதவத்தினம்
செய்துமெய்ப்போதத்தைச் | சேர்ந்தமுனிவர்கட்கும் (மங்

இனிஇவ்வுலகத்தில் | லாருந்தக்கிணை
யில்லையென்றனுப்பிய | யெங்களுக்குத்துணை
தலையெசெய்து ாத் | தருங்கோவிந்தாவென்று
சாற்றும்பாண்டவருக்குந் | தங்களன்னையாருக்கும் (மங்

விநாயகர்வருகிற பொது-விருத்தம்.

இராகம்-பைரவி.

மூக்கணர்புதல்வனுபுமுராஅரிமருகனையுந்
தக்கன்வேள்வியைத்தவிர்த்த தனியானைமுகவனையும்
பக்குவமடைடஞானமபகாந்தவருக்குமேலாய்
விகடவேவிடங்குட்வேத விநாயகர்வருகின்றாரே.

விநாயகர்-வருகிற-தரு

இராகம் பூரிகல்யாணி-ஆதிதாயம்.

பல்லவி.

செண்ணைவிநாயகர்வந்தார் | இதோ
செண்ணைவிநாயகர்வந்தார்

அநுபல்லவி.

மன்னும்ராயகல்லூர்வாழும் | ராமச்சந்திரன்
வழுத்துநாடகத்திறகுமுன்னிற்கவே | (செண்ணை)

சரணங்கள்.

சிரசிற்பொன்முடிதுலங்க | நுதலிற்
றிவ்யவெண்ணீறுகாப் | பிலங்க
உரத்தில்முப்புரிநூலு | மசையமிக்க
ஓங்குபசாங்குசங்கரத்தி | லிசைய (செண்ணை)

பத்தர்சித்தரடி | வணங்க வாம
பாகத்தில்வல்லபை | யிணங்க

சுற்றியண்டர்கள் புட்பமாரி தூற்ற
தூயவந்தணர்கள் வேதங்களைச்சாற்ற (சென்னை)

சுவைமிகுமுக்கனி யுண்டு-நல்ல
ஓதாசைவடையுட் கொண்டு
எவைமானமூஷி கந்தைக்கூலி
இன்பமாகத்தா னதின்மீதில்மேவி (சென்னை

கட்டியக்காரன்வருகிற-பொது விருத்தம்

இராகம்தோடி.

தருமத்தினிலேயிற்சிந்தை தன்னையெப்போதும்வைத்து
வருமன்பர்துயரைநீக்கி மகிழ்வுகொண்டாடச்செய்யும்
திருமகளகொழுந னை சீதரன்பதத்தையெண்ணி
துரிதமாய்கட்டியக்காரன் சொகுசுடன்வருகின்றனே.

கட்டியக்காரன் வருகிற-தரு.

இராகம்-சங்கராபரணம்-அடதாளசாப்பு.

பல்லவி.

கட்டியக்காரன்வந்தான் உதாரக்
கட்டியக்காரன்வந்தான்

அநுபல்லவி.

ட்டிச்சிங்கம்போல்குதி குதித்து கெற்சித்துக்கொண்டு (கட்டிய)

சரணங்கள்.

தலையிற்சரிகைக்பாகை மாட்டி-உயர்ந்த
தங்கத்துராயிற் சூட்டி
மலையுங்கிடுகிடெங்றே மருளுமிருதோளினில்
மாணிக்ககிரீடியை மருவும்படியாய்க்காட்டி (கட்டி)

கண்டவர்மனங் கலங்க-சபையினிற்
கத்திகேடய மிலங்க
மண்டலம்புகழ்குந்தி மைந்தர்களவனவாசம்
வருஞ்சரிதையைச்சொல்ல-மகாசபைதுலங்க (கட்டிய)

சல்லடங்கச்சை துன்னகாலினிற்
சதங்கைகலக லென்ன
எல்லவரும்புக ழெம்பிரான் பதந்தனை
இரவும்பகலுந்துதித்-திருப்பவனிவனென்று (கட்டிய)

கட்டியக்காரன்-சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் துரியோதனன் செய்தகபடமாகியசூதாட்டத்திலே தங்களுடைய நாடுநகரம் ரொக்கரொசனமுதலாகிய தாந் தோற்றுவிட்டுப்பாண்டவர்களுமதுரோபதையும்வனவாசஞ்செய்யவருகிறவிதங்காண்க,

பாண்டவர்வருகிற பொது விருத்தம்

புலிக்கஞ்சுஞ்சிங்கத்தைப்போல் இடிக்கஞ்சும் வீரரைப்போல்
எலிக்கஞ்சும்பூனையைப்போல் இடிக்கஞ்சகரைப்போல
பெலிக்கஞ்சுக் கருக்கைப்போல கீர்த்திமாம பாண்டவாள் நாட்
பெலிக்கஞ்சியிட்டஆனை பெருகி வருகின்றாரே

பாண்டவர்கள்-வருகிறதரு,

இராகம் தோடி மிசுரதாளம,

பல்லவி,

பாரோர்புகழுமதிபதிகளாகியபஞ்ச
பாண்டவரிதோவந்தார்

அநுபல்லவி

பாரந்திடுந்தாங்கள் சேசமுஞ்செல்வமுந்
தானகூறினிற் செலுத்திவனந்தனிற்குப் (பாரோ)

சரணங்கள்

சிங்காரமாங்கொலுவை மறந்து-தாங்கள்
தீரவீரமெல்லாந் துறந்து
செங்கோறகொண்டவரிடத்தினிற்றருமமுஞ்
சேருமென்றதும் பொய்த்துப்போமோமெனவு மெண்ணி

(பாரோர்)

பெரியோருமனர்பக்ஷ மானுர்-சகுனிப்
புரட்டுக்கேத்துணையாகிப் போனார்
சரியாயிதென்றுசொன்னவிதுரனை விதுரராஜன்
தங்கள் பேச்சையுந்தள்ளிவிட்டாரே யென்று சொல்லும்

(பாரோர்)

ஆதிமூலமேபரந் தாமா உந்தன்
அடியர்கதிக்கனேதய ராமா
மாதுலட்சுமியை மார்பினில்வைத்திடுந
மாதவனேயுபய பாதமேகதியென்று

(பாரோர்)

தருமர் தம்பிமார்களுக்குந்

துரோபதைக்குஞ்சொல்விருத்தம்,

என்னிடதம்பிமாரே யிலகுதுரோபதையேகேளாய்
நந்நிலநாட்டைவிட்டு அடவியில்வந்துசேர்ந்தோம்
மன்னுமிவ்வனந்தான்மெத்த வளம்பெறவிருப்பதாலே
சின்னமில்லாமலிங்கே சிலகாலஞ்சஞ்சரிப்போம்.

வசனம்

கேளும் என்னருமைத்தம்பிமார்களே துரோபதையேநாம் நு நாடு நாநகரிழந்து இந்தஆரணியத்திலே வந்துசேர்ந்தோம் ஆகிலும் இந்தவனம்நன்றாய்த்தழைத்து தடாகமுஞ்சோலைகளுமா யிருக்கிறபடியினாலே இங்கே சிலகாலம்வாசம்பண்ணுவோம தம்பிமார்களே.

தம்பிமார்நால்வரும்-தருமருக்குச்சொல்விருத்தம,

நந்நாடிழந்துமெய் வேர்த்தளங்கள் தமையனேபோற்றிநீதான்
சிந்தையில்நினைத்துச்சொன்ன திருவாக்குக்கெதிர்வாக்குண்டோ
முந்திறும்வந்தபிந்த முனிவர்வாழ்கானகத்தில்
சந்தமாயசிலதுகாலஞ் சஞ்சரித்திருக்கலாமே-

வசனம்

பிராவுக்குநிகரான அண்ணாவே தேவரீர் திருவாக்குக்கெதிர்வாக்குண்டோ உம்முடைய மனோபீஷ்டப்படிக்கு இந்ததிவ்வியமான வனத்திலேசிலகாலம்வாசம்பண்ணுவோம் அண்ணாவே,

வேதவியாசர்வருகிற பொதுவிருத்தம.

வனத்திலிவ்வாறாகப்பாண்டவர் வாழ்ந்திருக்குநாளோர்
தினத்தினிலவரைக்கண்டு திடதயிரியமுஞ்சொல்ல
மனத்தினிலாசைகொண்டு மறைகளைச்சிறக்கநந்து
கனத்தைக்கொள்வேதவியாசர் காட்டுக்குவருகின்றாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால்-இந்திரப்பிரஸ்தத்திலேயிருந்தபாண்டவர்களை துரியோதனன்கபடமார்க்கமாய்மைத்துனமகாபாதகனான சகுனியைக்கொண்டு சூதாடச்செய்து சகலமுங்கெலித்துக்கொண்டுபன்னிரண்டு வருஷம் வனவாசமும் ஒருவருஷம அஞ்ஞாதவாசமுஞ்செய்யச்சொல்லி பாண்டவர்களைகாட்டுக்கு அனுப்பிவிட்டபோது அவர்களிடத்திற்கு வேதவியாசர்வருகிறவிதங்காண்க.

வேதவியாசர்வருகிறது

இராகம்-பரசு-ஆதிதாளம்

பல்லவி,

வியாசர்வந்தாரே இதோ வேத
வியாசர்வந்தாரே

அநுபல்லவி,

பாசவினையெள்ளள வில்லாத
பரமயோகியான போதர் (வியாசர்)

சரணங்கள்

மேதினிவாழ்வை வெறுத்தோர் சதா
வேதகலைசிக சதுரரோ
ராஜரிஷிகம லாலயத்துறை
சதுர்முகபிர மாவைநிகர்த்த (வியாசர்)
கமண்டலந் தண்டு ஏந்தி இடையிற்
காவிவஸ்திர முடுத்து
விமலமானமெய்ஞ் ஞானமல்லாமல்
விளக்குமாயங்கள் பகுஞானமறிந்து (வியாசர்)
சராசரமளித்த கையர் ஞானத்
துறையறிந்திடு மெய்யர்
பக்தமனத்தி லிருந்துமெய்யும
பாண்டவர்களை காத்தருள்செய்ய- (வியாசர்)

பாண்டவர்கள் வியாசருக்குச்சொல்

போற்றி விருத்தம்.

சுருதியோர்நாலுஞ்சொன்ன தூயமாதவரே போற்றி
சத்தியபொருளில்வந்து காக்குமுத்தமரே போற்றி
குருகுலமனைவருங் குறைமாற்றுவரே போற்றி
திருவளர்வியாசரேயுன் திருவடிபோற்றிபோற்றி

வியாசர்பாண்டவர்களுக்கு வாழ்த்துவிருத்தம்.

பாரினிற்புகழ்பெறுங்களைப்பாண்டுமைந்தர்களேவாழி
குறையெவ்வளவுமில்லாக் குந்திமைந்தர்களேவாழி
இந்தநந்தினிபரே நீரெங்களாசீர்வாதத்தால்
உறவிவ்வுலகில் நீவிரொருகுறைவின்றிவாழ்வீர்

இதுவும்வியாசர்சொல்-விருத்தம்,

தாட்டுணைசலத்திலவாழுந்தாமரைதனைப்பிடுங்கி
வாட்டிடக்கரையில்போட்ட வாறுபோல்மைந்தரேநீர்

நாட்டினிலிருந்தீங்கள் நகரெலாமிழந்தேயிந்த
காட்டினில்மெலிந்துநின்ற காரணமென்னசொல்வீர்

வசனம்

கேளுங்கள் என்னுடைய பிள்ளைகளே ஜலத்திலிருந்த தாமரையைப்பிடுங்கி கரைதனில்போட்டாற்போல உங்களிருப்பிடமான நாடுநகரத்தைவிட்டு இந்தஆரணியத்திலேவந்து மிகவுந்தளர்ச்சியாய்ச்சஞ்சரிக்கவேண்டிய காரணமென்ன சொல்லுங்களென்மைந்தர்களே.

தருமர்வியாசருக்குச்சொல்-விருத்தம்,

கண்டகன்துரியனேதோ கபடத்தைமனதிலெண்ணி
மண்டபமொன்றுண்டாக்கி மகிழ்ச்சியாய்வரவழைத்து
தண்டகன்கொடியபாவி துட்டருஞ்சகுனிகன்னால்
விண்டசூதாடச்செய்து விளைவித்தவிதமிதையா

வசனம்

கேளுஞ்சுவாமிவேதவியாசரே மகாபாவியானதுரியோதனன் ஒருமண்டபஞ்செய்து துரோகியானசகுனியைக்கொண்டு சூதாட்டஞ்செய்தகாரணத்தினாலே வந்தவிடையூறுகள்சுவாமி

வீமன் வியாசருக்குச்சொல்விருத்தம்

எங்களையழைத்தவாறு மிறையவன்சகுனிகாணன்
தங்களுக்குள்ளேயாமங்கள் கடமனைத்தவாறும்
வஞ்சனைசூதாலெங்கள் வாழ்வெலாம்பறித்தவாறும்
இங்கதையெழுதவென்றால் ஏடங்கொள்ளாதையா

வசனம்

கேளுஞ்சுவாமிவேதவியாசரே எங்களைக்கபடமாயழைத்ததுவும் அந்ததுரியோதனன்சகுனி காணன் மூன்றுபேரும் உள்ளுக்குள்ளே உபாயகற்பனைகள் நினைந்து சொக்கட்டாடி எங்கள் சம்பத்திரபாக்கியங்களெல்லாம் பறித்துக்கொண்டதுவும் இதுகளெல்லாஞ்சொல்லவும் ஏட்டிலேயெழுதவும்முடியாது சுவாமி

அர்ச்சுனன் வியாசருக்குச்சொல் விருத்தம்

வில்லுண்டுவிளைகளுண்டு விசயனென்றொருபேருண்டு
சொல்லுண்டுமேலும் பரன் தூயநற்பாசமுண்டு
கல்லுண்டமனத்தோர்தம்மைக் கணவிட்டபருஞ்செய்வேன்
தல்லுண்டபெருங்கோணனை மறுத்ததால்பொறுத்தேனையா

வசனம்

கேளுஞ்சுவாமிவேதவியாசரே அவர்களுடையசதிகற்பனைக்கு பயப்பட்டவன்நானல்லவென்றால்என்கையிலேபிரசண்டக்காண்

பதோன்றுண்டு அகோரமானபாணைக்கொண்டு இக்குவிசயனென்
றனைக்கொருபேருமுண்டு ஆனையினாலே அந்த துரியோதனனிங்க
ளையிமைப்பொழுதிலே நீர்தூளிப்படலாமா அடித்துப்போடுவேன்
எங்களண்ணன் தர்மபுத்திரர் தடுத்ததினால் பொறுத்துக்கொண்டிருந்
தேன் சுவாமி

நகுலன்-வியாசருக்குச்சொல்-கவி

பெரியவனென்றிடும் பெரியதந்தையும்
துரியன்சகுனி துர்ச்சாசனன்கர்ணனும்
எரியெழுநெருப்பென வெழுந்து துள்ளிய
விரிவைநானென்னதென்று வியம்புவேனையா

வசனம்.

கேளுங்கள்சுவாமிவேதவியாசரே பெரியவனென்றுசொல்லப்பட்டஎங்கள்பெரியதகப்பனை திருதராட்டிரனும் துரியோதனனும் சகுனியும் கானன் துற்சாதனனும எங்களுக்குவந்ததாழ்வைக்கண்டு அவர்கள் எழுந்து துள்ளினகொண்டாட்டங்களை நானெவ்வளவென்று சொல்லுவேன் சுவாமி

சகாதேவன்வியாசருக்குச்சொல் விருத்தம்

கோவில்நகரநாடுங்கொண்டனரதுபோகட்டுந்
தீவினைநூறுகோடி செய்தனரதுபோகட்டுந்
தாவியவண்ணாருழுஞ் சபைதனில்நிறுத்தியிந்தப்
பாவையைச்சபான பங்கமுஞ்செய்தாரையா

வசனம்.

கேளுங்கசுவாமிவேதவியாசரே எங்களுக்குண்டான நாடுநகரங்களைபறித்துக்கொண்டார்களே அதுவும்போகட்டும் அல்லதுநூறுகோடி பொல்லாங்குகளசெய்தாலும அதுவும்போகட்டும் தன்மானம்பிராமாணமென்றெண்ணாமல துரோபதையைச் சபையிலேநிறுத்தி துகிலையுரிந்து மானபங்கமுஞ்செய்தார்களே அதற்கீடல்லவேயிதுகளெல்லாஞ்சுவாமி

துரோபதை புலம்பல் தரு

எதுகுலகாம்போதி

கண்ணிகள்

பாவிதுரியோதனனுஞ்செய பங்கந்தைநானென்னசொல்வேனே
முனிநாதா (ஆநந்த)

பண்ணுமஸ்தினாபுரத்தில் மண்ணும்விண்ணுந்துதையா

தீவரமாயோர் மண்டபஞ் செய்தழைப்பித்தார்களையா
முனிநாதா அதில்
தீரர்களெல்லாமிருந்துண் தேசகாலம்போகுதென்றார்
முனிநாதா
கொடியன்சகுனிராசன குதிகுதித்தெழுந்துநின்று
முனிநாதா ஓகோ
கெற்றவாக்கடுத்தசூது வித்தையயாடலாமென்றான்
முனிநாதா
மிடியென்றெண்ணமல்தர்மர் மிகவுஞ்சம்மதித்தாடி
முனிநாதா தனது
மித்திரர்களையுந்தோர்த்து வீட்டுடனேதானுந்தோத்நார்

எல்லாங்கெலித்தபின்பு என்னைக்குறித்தாடசொன்னார்
முனிநாதா இது
யெதகன்றறியாமலே வைத்தாடித்தோத்துவிட்டார்
முனிநாதா
பொலலாத துரியனப்பா புன்னகைமிகவுங்கொண்டே
முனிநாதா தம்பி
போயத்துரோபதைதசிகையப பிடித்திழுத்துவாவென்றான்
முனிநாதா
ஓரகத்திமாருடனே யுட்காந்திருந்தேனப்போ
முனிநாதா இநத
வுளவையவர்களெனக் குரைத்திடாமற்போனார்கள்
முனிநாதா
வீரத்துடன்வந்தவன் விளம்பியதையென்சொல்வேன்
முனிநாதா பின்னும்
வீள்ளுமெனத்தள்ளிவந்த கொள்ளையையானென்னசொல்வேன்
முனிநாதா
காந்தாரியென்மாமியைபோய்க் கட்டிக்கொண்டழுதேனையா
முனிநாதா அநத
கள்ளவஞ்சகியுங்கூடத தள்ளிவிட்டாளென்னையப்போ
முனிநாதா
பாந்தமுறும்பாஞ்சாலன் பாக்கியவதிநானென்றும
முனிநாதா சற்றும்
பாராமலுழுத்தவன் பாரியாளென்றெண்ணமலும
முனிநாதா
மயிரைப்பிடித்துயென்னை மண்மேலிழுத்தானையா
முனிநாதா ஒரு

வைப்புவா அபிஷேகமற் சொற்படாமிகழ்ந்தானையா
முனிநாதா

வைரிதுரியோதனன் வனசபைக்கழைத்துவந்தான்
முனிநாதா எந்தன்

வஸ்திரமுரியச்சொல்லி மன்னவன்றுள்ளினானையா
முனிநாதா

துஷ்டன் துர்சாதனனெந்தன் துகிலையுரிந்தானையா
முனிநாதா அந்த

துகிலுக்குடனுடனே கூறையெனக்களித்த
முனிநாதா

கிருஷ்ணர் மானத்தைக்காக்க கிரீடிசனுமெச்சியே
முனிநாதா எந்தன்

கீர்த்தியைக்கொண்டாடி பகைக் கேட்டிருந்திருப்பீரே
முனிநாதா

கொன்றை தும்பையைச்சிரசு கொண்ட பரஞ்சோதியைய
முனிநாதா நிதம்

குறித்துவிதிய பகரம் கூப்பித்தொழுதுவந்த
முனிநாதா

அன்றைக்குமின்றைக்கும் என்றைக்கும் நீ துணையையா
முனிநாதா எம்மை

ஆதரித்துக்காக்கவாத வேதவித்தாய்வந்தையெங்கள
முனிநாதா

வியாசர் பாண்டவருக்குச்சொல் விருத்தம்

இளம்பிறையணி சடாதரனை வெங்கண்ணனின் மணிகாள் கேளீர்
துளங்காது துயருங்கொண்டு சஞ்சலப்படாதே தண்டீர்
வளமிகு புலிகிறசக்கர வர்த்திகளாயிருந்த
நளனரிச்சந்திரன்பட்ட நற்றுறையறிந்திலீரே

வசனம்.

வேந்தர்களே மிகவும் இளமனதுள்ள மைந்தர்களே நீங்கள் மிகவும் தளர்ச்சியாய் சஞ்சலப்படவேண்டாம் சுகதுக்கங்களானது எல்லோருக்கும் உண்டு இந்தக்கடல் சூழ்ந்த பூமியெல்லாம் சக்கரவர்த்திகளான நளன் அரிச்சந்திரன் பட்ட துன்பங்களைப்போல் இனி ஒருவர் படப்போகிறார்களா கொஞ்சநாளையிலே உங்கள் துயரமெல்லா

கேங்கிப்போம் நீங்கள் விசனப்படவேண்டாம் மைந்தர்களே.

தருமர், வியாசருக்குச்சொல்விருத்தம்

அடவியிற்பன்னிரண்டு அஞ்ஞாதவாசமொன்று
திட்டமுடன் பதின்மூன்றுமென்றவேசொல்லி
அடலதுரியோதனாதியனைவருஞ் சொன்னவார்த்தை
கடனெனச்சிரசிலேந்திக்கொட்டிமசஞ்சரித்தோமையா

வசனம்,

கேளும் சுவாமி வேதவியாசரே ஆரணியவாசம் பன்னிரண்டு வருஷமும் அஞ்ஞாதவாசம் ஒருவருஷம் சஞ்சரித்துவந்தால் பெட்டியாதும்போல அவரவர்நாடுநகரம் அவரவர்களே அனுபவித்துக்கொள்ளலாமென்றும் இடைவிடாமலேயுண்டல்லமப்படியும், இந்தப்படிக்குஞ் சஞ்சரிக்கவேணுமென்றும் சொன்னபீஷ்மராதிபெரியோர்கள் வார்த்தையைத் தள்ளாமல்வந்து இந்தஆரணியத்திலேயிருக்கிறோம் சுவாமி

வியாசர் தருமருக்குச்சொல்விருத்தம்

கடந்துபோனசனையெண்ணிக்காரியமென்னகண்டாய்
அடாததிற்றேயத்திலேயவருமக்கிணங்கமாட்டார்
இடந்தருசிவன்றனையுற்றதிகழ்பாசுபதந்தைப்பெற்றால்
விடந்தருபகைவர்தம்மைவென்றிநீயிருக்கலாமே

வசனம்

கேளுங்கள்பாண்டவர்களே நடந்துபோனகாரியத்துக்கு ஆலோசனைசெய்து ஆகவேண்டியதென்ன நன்மையில் அவர்கள் உங்களுக்கு இணங்குகிறதில்லை அப்படிப்பட்ட சத்துராதிகளைச்சாதிக்கும்படியாய் பரமசிவன்கையிலிருக்கிறபாசுபதத்தைப்பெற்றாலொழிய அவர்களைவெல்லக்கூடாது ஆகையினாலே அதற்குண்டானசாதகத்தைப் படவேணு மைந்தர்களே

தருமர்வியாசருக்குச்சொல்விருத்தம்

வேதமோர்நாலுஞ்செந்தவேதாந்தவிதத்தையுந்தன்
பாதமென்சிரசிறவேநபணிந்தனனொருவிண்ணப்பம்
ஓதுமுன்றிருவக்காலேயொருவரைக்குறித்துச்சொன்னால்
ஏதமில்தவமேசெய்யயிட்சணைநடக்கின்றோமே

வசனம்

கேளுஞ்சுவாமி வேதவியாசரே ஒருவிண்ணப்பம் தேவரீர் திருவாக்கினாலே இந்த ஐந்துபேரில் ஒருவரைக்குறித்து இன்னார்போய்த் தவஞ்செய்து பாசுபதாஸ்திரம்பெறவேணுமென்று சொன்னால் அப்படியே நடந்துகொள்ளுகிறோம் சுவாமி

வியாசர்தருமருக்குச்சொல் விருத்தம்

உங்களிலருக்குளிந்தவுணர்வுள்ளவிஜயனுனல்
கங்கணங்கட்டிக்கொள்வான் கைலாயமலைக்குப்போவான்
சங்கரன்றன்னைநோக்கித்தவத்தையுஞ்செய்வானந்த
பங்கயமில்லாதபாசுபதத்தையும்பெறுவான்கண்டாய்

வசனம்

ஆனால்உங்களைந்துபேரிலே இந்தஅர்ச்சுனராஜனுனல் கைலாசத்துக்கும்போவான் தவமும்செய்வான்பரமசிவன் வரவையுங்காண்பான்பாசுபதாஸ்த்திரத்தையும்பெறுவான்ஆகையால்இந்த அர்ச்சுனராஜனேதபசுக்குப் போகவேண்டியது,

தருமர்வியாசருக்குச்சொல்விருத்தம்

மனச்சிற்றமாரியிந்தவனத்திறுக்கனுப்பிவிட்டான்
தனச்சித்தபடியேகாட்டிற்றவிக்கின்றோந்தளருகின்றோம்
எனச்சித்திமினிவேறுண்டோ வெங்களைக்காக்கவந்த
உனச்சித்தமெங்கள்பாக்கியமுன்மொழிப்படியேசெய்வோம்.

வசனம்

துரியோதனன்மனமறியயெங்களைகாட்டுக்குஅனுப்பினுன்னுங்களும்இந்தவனத்திலேயிருந்தப்பிரயாசைப்படுகிறோமஆகையினலேதேவரீர் சித்தமெப்படியோ அப்படியேசெய்க்கக்கடவோமசுவாமி

வியாசர் அர்ச்சுனனுக்குச்சொல்லுகிற

உபதேச விருத்தம்

ஓம்நமோநமசிவாயாஉமாபதிசூலபாணி
ஓம்நமோநீலகண்டாஓம்பரஞ்சோதிவாவா
தானெனுமடொருளைக்தன்றலைதனிலுக்கிறங்கி ந்து
பானுபோல்விளங்கும்பாசுபதாஸ்த்திரந்தருகுவாயே

அர்ச்சுனன்வியாசருக்குச்சொல்விருத்தம்,

தந்தைதாய்தாயாயுற்றதருமரே இங்கேவந்து
சிந்தையில்மகிழ்ச்சிகூர்ந்ததேசிகாநின்றுள்போற்றி
மந்திரம்பெற்றேன்பெற்றேன்வாழ்வெலாம்பெற்றேன்பெற்றேன்
தந்திரம்பெற்றேன்பெற்றேன்சயஸ்தரும்பெற்றேனையா

வியாசர் அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்.

வடதிசையிமயசாரல் மலையருகினிலேசென்று
திடமுன்சிவனைநோக்கித் திருத்தமாய்த்தவத்தைச்செய்து
படையினிற்பெரியபாசுபதரத்தையும்பெருவதல்லால்
கடவுள்தன்னருளும்பெற்றுக் கடிகினில்வாராயப்பா

வசனம்.

கேளாய் அர்ச்சுனா கைலயங்கிரிக்குப்போய் தபத்தைச்செய்து பரமசிவன் அனுக்கிரகத்தினாலே பாசுபதாஸ்திரத்தைப்பெற்றும் சீக்கிரம்வருவாயப்பா,

அர்ச்சுனன்-வியாசருக்கும் தருமருக்குஞ்-சொல்-விருத்தம்

அப்படிதானேசென்று ஆதியாஞ்சிவனைநோக்கித்
தப்பிலாதவத்தைச்செய்து தநும்படைபெற்றுவாரேன்
ஒப்பிலாமுனிபோற்றி யுயர்ந்தயென்னண்ணன்போற்றி
மெய்ப்புடனெந்தனுக்கு விடையதுதருகுவீரே

வசனம்

கேளுங்சுவாமிவேதவியாசரே அப்படிபோய்ஈஸ்வரனைநோக்கித்தவஞ்செய்து பாசுபதாஸ்திரம்பெற்றுவருகிறேன் சுவாமி,

வியாசரும்-தருமரும்-அருச்சுனனுக்குச்சொல்-வாழிகவி.

பகையாளிகள்வருகார்
புகுபோர்வலுவிஜையா
தருநன்னெறியுடனே
சுகமாய்ப்போய்வருவாய்

வியாசர்-பாண்டவருக்குச்சொல்-விருத்தம்.

அருமைமைந்தர்களேகேளீர்அம்மாதுரோபதையேகேளாய்
வருநலம்துன்பம்ரண்டும் வருவதுநம்மாலல்ல
கருதியநல்லோருக்குக்காடுநாடாகும்நீங்கள்
தருமநன்னெறிதப்பாமற் சஞ்சரித்திருங்கள்வேறேன்

வசனம்.

கேளும்பாண்டவர்களே அம்மாதுரோபதையே சுகமும்துக்கமும்நம்மால் வருகிறதல்ல ஊழ்வினைப்படிக்கு நடக்கும் நல்லோர்களுக்குக்காடேநாடாகும் ஆகையால்நீங்கள்சுகமாயிருங்கள் நான்என்னுடைய தவவனத்திற்கு அதிகசீக்கிரமாய்ப் போகவேணும்செலவு கொடுங்கள்மைந்தர்களே.

தருமர் வியாசருக்குச்சொல் வசனம்.
சரணஞ்சரணம்அப்படியேபோய்வாருஞ்சுவாமி.

போது-விருத்தம்.

சடைமுடிதரித்துமெய்யிற்றவன்வெண்ணீறுபூசி
இடையினிற்றாவிலைவர மொழிலுடனுடுத்திநல்ல
வடிவுளருத்திராக்ஷமாலையுமணிந்துகையில்
அடலம்புவில்லுங்கொண்டு அருச்சுனன்வருகின்றானே

வசனம்.

அப்போதப்படியென்றால் வேதவியாசர்சொற்படிக்கு அருச்சு-
னன் தவஞ்செய்யப்போகிறவிதங்காண்க

அந்தவஞ்செய்யவருகிற-தரு இ-ம் தோடி மிசுரதாளம்.

பல்லவி.

தவஞ்செய்யநடந்தானே-அருச்சுனராசன்
தவஞ்செய்யநடந்தானே.

சிவாசிவாசிவவென்று கோவாமிர்தமுண்டு
தவறில்லாததிவ்ய தபசிவேடங்கொண்டு (தவஞ்)

சரணங்கள்

மெய்யெங்கும்விபூதி தரித்துவேத
வியாசர்சொன்னமந்திர முச்சரித்து
ஐயன்விடையிலேறுந் துய்யன்கழலைநாடி
செய்யமுனிவர்பாதஞ் சிரசின்மீதிற்சூடி-(தவஞ்)

நீண்டசடைக விலங்க-அந்த
நெடியசிலைகையிற் றுலங்க
பூண்டமறைமுனிவர் பொருந்துமிடங்கடாண்டி
பொருப்புவில்லேந்தும புரந்தரனருள்வேண்டி (தவஞ்)

உலகவாழ்க்கையெல்லா மறந்து தன்
னுடன்பிறந்தாரையுந் துறந்து
இலகுநமப்புயந்த இடாகவெல்லாம்நங்க
ஈசன்கையிலிருந்து மொழிபாசுபதமவாங்க (தவஞ்)

மோகினிவருகிறபோதுவிருத்தம்.

தனைவில்மெய்மறந்து நித்திரைசெய்யுகின்ற
கனவிலுமாதர்பேரைக் கருதுவொண்ணுதென்று

னஞ்சயன்சபதங்கூறித் தபசியாய் நடக்கக்கண்ட
வனசெகன்மோகனப்பெண்மயல்கொண்டுவருடன்றுளே.

வசனம்.

அதெப்படியென்றால் பரமசிவனிடத்திலே பாசுபதாஸ்திர
ம்பெறவேணுமென்று அர்ச்சுனராசன் தவஞ்செய்யஒருதபசியாய்வே
டங்கொண்டுகைலாசகிரியைத் தேடிக்கொண்டுபோகும்போது மோ
'வ ிதுங்காண்க.

மோகினிவருகிற-தரு-இ-ம்-அசாவேரி-தாளம்

பல்லவி.

விகசிதபரிமள-பதுமவதனநய-விலாசமோகினிவந்தாள்

அநுபல்லவி.

மகபதியுலகினில் மருவும் அரிவையர்கள்
வங்கனமெனநித நூர்த்திபுரிதரு
விந்தையினிலதிக சுந்தரமிகவுள (விக)

சரணங்கள்.

ாரிலரிதாமிவ ளங்கம் நல்ல - பத்தரைமாற்றுப்பசுந்தங்கம்
சேருங்காமரசவில்லங்கம் - பல்லாங் தோர்ந்துள மன்மதப்பிரசங்கம்
ஆரும்பிரமிக்குமழ் சானவுபிர யோகம்
அங்கசன்சாஸ்திரங்க ளடைந்திடும பெருநயகம்

அண்டர்னினிதர்மயல் கொண்டுதவனெறிகள்
விண்டுபிரம்மையிறெடு தெணடனிடுமினிய (விக)

மிக்கபெருத்தவஸ்தனபாரம் - நல்ல விசித்திரமாகிய சகோரம்
தக்கநடந்திடுமொயபாரம் - மதன் , சாருபடிக்குலங்காரம்
பக்குவமானநல்ல பருவமதின்கெம்பீரம்
புருகப்பருகவின்பம் பயக்குமமிர்தசாரம்

னன்னுமுரிசைமிகு கன்னலெனருமொழி
மின்னலெனவும்மெ கு நன்னயமுடனிதோ (விக)

மெச்சுமொழிகள்வாம்பேச - கிளிகன - மேலனைநகக்கேட்டுவாய்கூச
பச்சிலே மருநசன் வாடை நல்ல ரதியெனும்பிர காச
இச்சையெலர்சுதவந்து யெய்துமகரப்பிரிமாச
மிரேழுலகுமவிலே யிட்டெழுதுமுலாச

இசைமலணிநவ ரசமுள்ளகுமரி
திசையிறபுகழும்வில்லில் விசயன்வரும்வழியில் (விக

மோகினிசொல் கொச்சகம்.

காதல்கொடுக்குகந்த காரணரோ பகைவருந்த
வேதர்படைத்தனுப்பும் வித்தகரோ மெல்லியலார்
போதமனங்கவர்கைப் போகிகருமபுண்ணியரோ
மாதவரில்வன்மதரோ வாததவமுனியே.

ஆஆ ஸ்திரீகளுக்கு ஆசையை அபரிமிதமாகக் கொடுக்கப்பட்டவரோ அல்லது பிர்மதேவனைகவருந்தி அறபுதமாகச்செய்யப்பட்டதிருவுருவமோ ஆஆ எவ்வர்ணப்பெண்கள்மனோயிஷ்டப்படிக்கு ஆசையை அனுபவிக்கும சதபுருஷர்களுக்குள்ளே இவர்தானோ மன்மதனே.

மோகினிசொல் சிங்காரப்பதிகம். இ ம்-கண்டா

மாணிக்கதீபமோ மன்மதசொரூபமோ
மாதவஞ்செய்திடும் மன்னரிவரோ
பூரணச்சந்திரனோ புகழுநற்சுந்தரனோ
பூவையாகஞ்சைசெய்யும் புனிதரிவரோ
சூரியப்பிரகாசனோ சுபகலையானோ
சுத்தமாயதவஞ்செய்யும் சித்தரிவரோ
அறுசாலையிந்திரனோ அரியமயில்கந்தனோ
அவனியிலேகின்ற அரசரிவரோ
அருமையதவமுனிவருக்கு ஒருமீதிலாசையில்லையோ
பருவமாதானைபுங்கிளியின்மெல்பாதமில்லையோ
மருகாமல்நடப்பதுர் மகாரிஷிகள்கில்லையோ
உருகாதமனமேதாரையில்லவுலகத்திலையே.

மோகினி அர்ச்சுனனைக்கேட்கும் விருத்தம்.

எழில்பெறுமுனிவரேயீர் தானெங்கிருந்தெவ்விடம்போறீர்
எழிலிலுன்னைப்போல உலகில் நான்கண்டதில்லை
விழியினாலுன்னைக்கண்டேன் மிதமிலாமோகங்கொண்டேன்
தழுவியெயெனதுமோக தாபத்தைத்தீர்த்துப்போவீர்

வசனம்.

மகத்தான அழகைப்பெற்றதவமுனியே -நீர் எங்கிருந்துயெவ்விடம்போகிறீர் உம்மைப்போல்செய்ந்தரியமான புருஷனை நானெங்குங்கண்டதில்லை ஆகிலும் உம்மைக்கண்டமாத்திரத்திலே அபரிமிதமான ஆசைகொண்டேன் ஆகையால் என்னைத்தழுவியென்மனோதாபத்தைத்தீர்த்துப்போவீர் வாரும்.

அர்சுனன்சொல்விருத்தம்-இ-ம்-நீலாம்புரி

மறைமுடிவிலுதித்தோனே மாதொருபாகத்தோனே
கறைமிடற்றவனேகால காலனேகண்மூன்றோனே
பிறைமுடிச்சடையோனேயென்பெம்மானேபித்தனேநல்
லிறைவனேயீசனேநீ யென்மனஞ்சோதிக்காதே

வசனம்,

அரகரா-சாலகண்டதிரிநேத்திரா சடாமகுடசதுர்ப்புஜசூலபாணி பார்வதிசமேதா-என்னைசோதனையிற் பிரவேசிகாமல் முன்னிற்கவேணுங்கர்த்தனே

மோகினிசொல்-தரு இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

பல்லவி

நில்லும்நில்லும்முனியே நானும்வாறேன்
நில்லுநில்லுமுனியே

அநுபல்லவி,

கல்லையுருக்குமுன் பல்லழகைக் கண்டேன்
அல்லதுனைககூட-ஆசைமெத்தவுங் கண்டேன் (நில்லும்

சரணங்கள்

பேசாமற்போவது தர்மமோ இந்தப்
பேதைமீதில்முன்பின் வர்மமோ
ஆசைகொண்டேயென்னை அயலாகயெண்ணாதே
ஐயோயோயிவ்வேளை அட்டிநீ பண்ணாதே (நில்லும்)

காமலாகிரிமிக வாகுதே-காமக்
காய்ச்சலாலேதிரேகம் வேகுதே
தீமையென்றுஞ்சற்றுஞ் சிந்தையிற்கொள்ளாதே
சித்தினிநானெந்தன் சிநேகத்தைத்தள்ளாதே (நில்)

கனிவாயிதழ்த்தேனை யூட்டுவேன்-நீபோய்க்
காணுங்காட்டையிங்கே காட்டுவேன்
முனிவரேநான்சொல்லு மொழிதனைத்தடுக்காதே
முன்வந்தயெனைவிட்டு மோனமாய்நடக்காதே (நில்)

அர்ச்சுனன்சொல்லிக்கொண்டுபோகிற விருத்தம்.

காசிக்குப்போகும்போதுகருமமுந்தொடர்ந்ததென்று
பேசியகதைபோலாச்சுபேதையான்செய்தபாவம்
ஆசுறுதவத்தைச்செய்ய அடவியுள்நடக்கும்போது
மாசுறுமாய்கையென்முன் வருவதேன்சிவசிவாசிவா

வசனம்

அரகரா காலகண்ட திரிநேத்திரா ஈசியாத்திரை போகிறவன் பின்னே கருமமுந்தொடர்ந்து தென்ற கதையாச்சுது நான் செய்சபாவம் உலகவாழ்க்கையை நீக்கித தவஞ்செய்யப்போகையில் பொல்லாலமாய் கைவந்து என்னுடன் போராடவேணு மா அரகராமகாதேவா

மோகினிக்கும் அர்ச்சுனனுக்கும் சம்வாத தரு

இ-ம் தோடி - காளம் - ஆதி,

மோகினி சொல் - தரு

கூடுவோம் வாரும் பிரக்யாதா சுகந்
தேடுவோம் விளையாடுவோமே கொஞ்சிக் (கூடு)
கொங்கைக் குடமிரண்டு மீறி யெந்தன்
கோவையிதழ்க்கே ஊறி இப்போ
கோதைநானுந்தனைக் கோரி உம்மைக்
கூடவந்தேனினி வர் நீர
இங்கேநானுந்தனுக் கென்சொன்னாலுஞ்செவிக
கேரலையோமையல் மீரலையோயின்று (கூடு)

அர்ச்சுனன் சொல் - தரு இ-ம் - தோடி - காளம் ஆதி.

கிட்டவாராதேபோடி என் சொற்
றட்டாதேயுன் சொற் கட்டாதேயென் (கிட்ட)
சட்டக்கல்விகள் பேசாதே மோசம்
தவமுனியோர்க்குப் பொல்லாதே உந்தன்
சமாதிதெல்லாம் இதைச் சொல்லாதே (கிட்ட)
ஸகபமேயென் முன்னில் நில்லாதே
ஆட்டகனக்கொண்டு போகவீ கிட்டக்கிட்டவந்து
துள்ளாடி கொள்ளாடிசீசீ (கிட்ட

மோகினி சொல் - தரு

கன்னிபாள் வெகு பாவி உம்மை
கண்டதேயென் மனந் தாவிசித்தம்
கலங்கியே வுருகுதென் றாவிமனங்
களித்திருக்கொருங் குலாவி
உன்னிதமாயிருஸ் தன்னியத்தைக் தொட்டு
உல்லாசமாயினதுசலலாபமும் கொஞ்சி (கூடு)

அர்ச்சுனன்சொல்-தரு

மாமுனிக்குமோக மேந்து அடி
மங்கையேயிவ்வென்ன வாதுயாம்
மனம்பார்த்துக் கள்ளின கோதுஉன்னை
வருகவுமனதுவொப் பாது
பூமியிலேயாரும்பெண்ணாசை களரினேன்
பேதைதன்னைகொண்டதாதேயுந்தனை கண்டேன் (கிட்ட)

மோகினிசொல்-தரு

உன்மனதிற்குறை யேதோ-பெண்கள்
உணர்வுதன்றும்நெறி யேதோ-போகம்
உமக்கனையத்தெரி யாதோ-யான்
உரைத்தமொழிப்பிரி யாதோ
என்மனதின்படியணைந்தீரே யானால்
யொருவனேமோகந்தீருவனே ஆஆ கூடு

அர்ச்சுனன்சொல்தரு,

வல்லாலக்கண்டிநீ போடி யான்
வள்ளல்பதந்தனைத் தேடி இவ்விய
வாசமலர்களைச் சூடி நெஞ்சில்
வைகையுடன்தியானத்தைநாடி
வல்லையிலேதவஞ்செய்ய நடக்கின்றேன்
என்னைத்தடுக்காதேயின்னம் மடக்காதே (கிட்ட)

மோகினிசொல்-தரு

ஐயோயித்தனைக் கோபம்-என்மே
லாகாதுகாமனால் தாபம்-உன்மே
லாவல்கொண்டேன் மோகசோபமீர்
அணையாவிட்டால் வெகுதாபம்
மையல்கொண்டேன்மீதில் மனமகிழ்ந்தேயின்று
மருவிரசந்தருகுவீரே ஆஆ (கூடுவை)

அர்ச்சுனன்சொல்தரு

மங்கையேவாது பண்ணாதே-அடி
மாதங்கிமனப்பா லுண்ணாதேஉன்னை
மருகுவேனென்று யெண்ணாதே-என்முன்
மல்லாடிநிற்க வொண்ணாதே
சங்கைகொள்ளாமலே யின்னந்தடுத்திட்டால்
சாதிப்பேனேஉன்னை வாதிப்பேனே பே.போ (கிட்ட)

அர்ச்சுனன்-மோகினிக்குச்சொல்-விருத்தம்

ஆவலாய்த்தவத்தைசெய்ய அடவியில்நடக்கின்றேனுன்
கேவலமெதிரேவந்துகெடுதிசெய்யவேண்டா
மேவியேயின்னமின்னமேவிழுந்துரைத்தாயானல்
நாவியேசபிக்கலாகுந்தையலேநடந்திடாயே

வசனம்.

கேளாய்வனஜகன்மோகினிநான் ஈஸ்வரனைநோக்கிமகத்தான தபசுசெய்யப்போகிறேன் நீஎன்தவத்துக்குவிக்கினந் தேடுவையே யாகில் உன்னைச்சபிப்பேன் வேண்டாம்விலகிப்போ?

மோகினிபோனபின்பு-அர்ச்சுனன்சொல்-தோத்திரம்

தரு-இராகம்-கண்டா-ஆதிதாளம்

பல்லவி

அரகரசிவசிவ மகதேவா உந்தன்
அருள்விழிபுரிசிவ மகதேவா

அநுபல்லவி

கருதவரியகர கபாலா செழுங்
கருணைக்கடலேகா கபாலா (அரகர)

சரணங்கள்.

சிவசிவசங்கர திரிசூலா உந்தன்
திருவருள்புரிந்திடு திரிசூலா (அரகர)
நஞ்சையருந்திய நாதா காளி
நாணநடனஞ்செய்த நாதா (அரகர)
இமையவான்புதல்வி மணாளா எந்தன்
இடர்நீக்கியாளானுக்கிரகை யாளா (அரகர)

அரசன்சொல்-தோத்திரம்ஆனந்தக்களிப்பு

அரகரசிவசிவசங்கர சம்போ சம்போ
அரகரசிவசிவசங்கர சம்போ
திங்களணிசடை யாளா-ராரும் (அரகர
தேடரிதானசெழும்வினை யாளா (அரகர)
பங்கயம்போன்றபொற் றுளாளென்னைப்
பாலித்தருள்செய்யும் பரம (தயாளா) (அரகர)

கொங்கைமலர்ச்சாரணி தோளா-அல்பர்
குறித்தவரத்தைக்கொடுக்கும் குணாளா (அரகரா)

மங்களமானகங் காளா-என்முன்
வந்தளித்திடவேணுமங்கைக பங்காளா (அரகர)

முத்தர்கள்காதநற் நாதா-ஞான
மூர்த்தியென்தமக்கருள்செய்யும் விநோதா (அரகர)

சித்தஜனையெரித்த போதா இயமன்
திடுக்கிட்டலறிவிழ வுதைத்த பாதா (அரகர)

சத்திமகிழும்பிரசங்கி யாதா-முத்தி
தாகினிதரித்திடுஞ் சாக்ஷாத்காரம் நா (அரகர)

வெற்றிமிகுத்த வங்கா இந்த
வேளைடிமையைக்காளத் தகாதா (அரகர)

இதுவும் அர்ச்சுனன்சொல்-நடை-தரு

இ-ம்-நீலாம்புரி தாளம்-ஜம்பை,

சண்முகனையீன்றெடுத்த சந்திரசடாதாரனே
சத்தியைப்பாகம்வைத்தசம்போசங்கரனே
விண்ணவர்கள்முனிவர்தொழும்விடையேறுநாதா
விளங்குமவெள்ளிமலைதனிலேவீற்றிருக்கும்போதா
பரவைகுழலகுந்தொழும்பரனே கண்பாராய்
பரிவுடனேயெனையாளப்பண்பாய்நீவாயாய்
அரவமதைசத்தாபரணமணிந்த ஆதிசெம்பிரா
ஆகரவாய்வந்துயெந்தனல்லல்தனைத்தீராய்
திரிபுரத்தைநகைத்தெரித்ததேவரனுகூலா
தேன்மொழியைச்சிரத்தில்வைத்ததிகழுந்திரிசூலா
கருதுமறைதான்துதிக்குங்காரணவிலாசா
கண்ணப்பன்றனக்குவரமளித்தசீலா
அன்னபூரணிக்கிசைந்தஐம்முகவிலாசா
ஐங்கரனையீன்றெடுத்த ஆதிபரமேசா
என்னையாதரியுமழுவேந்தும் பிரகாசா
இமையவர்கள்தொழுதேற்றுமென்சன்செகதீசா

பொது-வசனம்.

அதேதப்படியென்றால் இந்தப்பிரகாரம் அர்ச்சுனன்தோத்திரஞ்

செய்துக்கொண்டுநடக்கும்போதுகாட்டினில்வாழும் கண்டபே
டிவருகிறவிதங்காண்க.

பேரண்டி வருகிற-பொது-விருத்தம்,

கொண்டல்கள்குலைப்பழிக்கும் குழல்மாதுதானுமங்கே
அண்டர்கள்முனிவர்சித்தர் யாவருந்தியக்கங்கொள்ள
கண்டவர்மனங்கலங்கக் கன்னியின்ஸ்தனங்குலுங்க
மண்டலம்புகழ்பேரண்ட மயிலினைவருகின்றாளே.

இதுவுமது-சட்டளைக்கலிப்பா

இந்திரலோகத்திலோர்த்தமைபோலவே
யிடையிலாடைபொட்டியாணமிலங்கவே
சந்திரகாந்திமுகமுந்துலங்கவே
சவ்வாதணிந்திடுங்கொங்கைகுலுங்கவே
விந்தையாய்மல்லிமுல்லைகள்வீசவே
விஞ்ஞையாசவுல்லாசமதாகவே
சுந்தரமானரதிபோலுயபேரண்டி
சோலைசூழும்வனமதிலேவந்தாள்

பேரண்டிவருகிற தரு-இ-ம்-அசாவேரி தாளம்-ஆதி

பல்லவி

பரிமளமிகவுள்ள-விகசிதபேரண்டப்
பதுமக்கிளிமொழிப்பெண்வந்தாள்-எழில்
பலகலைமுனிவர்களுலகில்மயங்கிய பதுமசகிளிமொழி

அநுபல்லவி

திரிலோகமுனிவர்க்குந் தேவரனைவோருக்கு
தேன்மொழிதனைக்கண்டால் திகழ்சித்தமேயுருக்கும்
திடமுள்ளரதியிட வடிவுள்ளமடமயில்
தீர்ந்தரத்தின பொற்கொடிலீலையில்
தேர்ந்தசித்தினி ஜாதியிலுச்சித-பரிமள

சரணங்கள்,

கொண்டலையுங்குலைத் தண்டலையுமாலைக்
கோரைக்காய்வென்ற குழற்சொருக்கும்
கோடிப்பூரணச்சந்திர விம்பந்தனைப்பழிக்கும்
கோதைநுதல்தனை போலிருக்கும்
வண்டையும்வாளுஞ்சேற் கெண்டையும்மாவடிவும்
வடிவேலைவென்றவிழித் திருக்கும்-கன்னம்
வன்னக்கண்ணாடிநிகர்நாசி குமிழைவெல்லும்

வள்ளற்கொடிபோல் செவிமுறுக்கும்
செண்டுமுலைகுலுக்கும்சேயிழையின்பலுக்கும்
சித்தஜனைக்கலக்கும் ஜெகதலமும்மலைக்கும்
செம்பொற்கலையணி யிடைபிடிவாழைத்
தம்பத்தினையொத்திடு மிருதுடையாந்தச்
செகமதிநிலகிறமுனிவர்கள் பிரமைகொள்ளும்
ககனமதுலவிய சுரர்முதல்மயல்கொள்ளும்

பேரண்டிசொல்-கொச்சகம்

அங்கசன்போல்கானகத்தி லம்புவில்லுமேயெடுத்து
சங்கரன்போற்சென்னியின்மேல் சடாமகுட முந்தரித்து
திங்கள்முகச்சுந்தரமும் திருவுருவுமதான்படைந்து
பொங்கமுடனெதிரில்வந்தோர் மோகிக்கும்புண்ணியரோ

இதுவும்பேரண்டிசொல்-சிங்காரப்பதிகம்-இ-ம் கண்டா

மகரனோவழகானவீரனோதெரியாது
மகமேருபுசமதற்கேற்பதாமோ
எழிலானவுருவமோவிழியினிடபுருவமோ
எல்லையில்மதன்வில்லுக்கேறபதாமோ
மாசிலாச்சொர்ணமோமன்னனெவ்வூர்னாம
மாணிகவாரமும்பதிபராமோ
சிங்காரமாயனோசிருட்டிக்கும்ஆயனோ
செய்கையறியேனிதழ்ப்பவமாமோ
செகமதினிவ்வழகைப்படைத்ததாமோ
நான்முகப் பிரமனோரெழுநினோரோ
அகமகிழ்ந்தேனையிவரணைகுவாரோ
சுகலீலைசெய்யுமபரிசுத்தனிவரோ

அர்ச்சுனன்-சொல்லிக்கொண்டு போகிற-விருத்தம்..

அரியநான்மறைபோற்று மரவணிந்தவனேபோற்றி
கரியுரித்தனனேசெங்கைக் கபாலருத்திரனேபோற்றி
திரிபுரமெரித்தாய்போற்றித் திங்கள்சூடினவாபோற்றிப்
பரிவுடன்சோதியாமிப் பார்வதிபங்காபோற்றி

பேரண்டிசொல் விருத்தம்.

செம்பொன்சேருவைப்பழிக்கும் செழித்ததிண்புயனேகேளாய்
அம்புவிதன்னிலுன்ற னண்மையும்அழகுஞ்சந்திர
விம்பமும்விழியாறகண்டு விருப்பமோகங்கள்கொண்டேன்
சம்பிரமாயலைந்துசென்றால் சகாயன்றுடிதுணைக்கும்

வசனம்.

கேளும்சுவாமி இராசரிஷியே உனது ரூபசவுந்திரியத்தைக்கண்டியானமிகவும்விருப்பங்கொண்டேன் ஆகையால்நீரென்னைச்சேர்ந்தணைந்துபோவீர் வாருமாதவரிஷியே.

அர்ச்சுனன்-சொல்விருத்தம்.

பரவை சூழக்கியாதி பரமனைக்காண்பதற்கு
மரவுரியுடுத்தியானுந் தவஞ்செய்யப்போறேன்
விரகங்கொண்டென்றவத்தை விக்கினஞ்செய்யவேண்டாம்
திரமுடன்றடுத்திடாமற் சீக்கிரமாய்நடப்பாயம்மா

வசனம்.

ஆரம்மா இக்கானகத்திலென்னெதிராகநின்று என்விருத்தாவாய் மோகங்கொண்டுவழிமடக்கவந்தாய் நானீசனைநோக்கித் தவஞ்செய்யநடக்கிறேன் விலகிநில்லும் என்னம்மணியே.

பேரண்டிசொல்-கொச்சகம்

சந்தனமுட்சண்பகமும் சம்பங்கிச்சோலைகளும்
சுந்தரமாய்ப்புன்னைகளுங் குயிலுந்திகழ்குன்றச்சோலைகளும்
இந்திரமல்லிமுல்லைகளு மிருவாட்சிமலர்சொரியும்
அந்தமிகுமிவ்வனத்தி லணையலாமன்னவனே

வசனம்.

கேளும்மகா அழகைப்பொருந்திய ராசரிஷியேசந்தனப்பல்லக்கைப்போலே இருவாட்சிபார்த்தாசஞ்சூழ்ந்தவனத்திலேநாமிருவருங்கூடிவிளையாடுவோம் வாருமன்னவனே.

அர்ச்சுனன்சொல் கட்டளைக்கலிப்பா

சங்கராசிவசம்போசதாசிவா
சாம்பசிவதற்பரமூர்த்தியே
திங்கள்சூடியசெஞ்சடையாளனே
தேவதேவாயுன்றிருவடி நம்பினேன்
மங்கைபாகமலைக்குமனோகரா
மாதுவந்துடற்றடுப்பதுநீதியோ
ஐங்கரன்றனையீன்றிருக்காத்தனே
ஆதியேயிந்தச்சோதனைகண்செயவேண்டா

பேரண்டிசொல்-கட்டளைக்கலிப்பா

கோடிசூரியகாந்தியைப்போலவே
கொன்றைசூடியன்போலுமெமைக்கண்டுமே

நாடியேயின்றுவந்துமயல்கொண்டேன்
நண்மையாகவேமன்மதலீலையைத்
தேடியேநீரும்மோகமதாலே
தேவனேயொன்றனின்பமடங்கவே
கூடிநாமிருவோருங்குலாவியே
குணமதாகமருகவருகுவாய்.

ஆர்ச்சுனன்சொல் விருத்தம்.

வட்டவாள்விழியினாளேவணிதையேசொல்லக்கேளாய்
கிட்டவந்தனையுமென்றாய்கிளிமொழியுன்றன்பேரை
பொட்டெனவுரைக்கவேணுமபூவைகளிங்கலுவலென்ன
சட்டமாய்வனத்தில்வந்தசரித்திரம்விளம்புவாயே

வசனம்,

ஆரடிய டிபெண்ணேஇந்தவனத்திலேஎன்மேல் விருதாவாய் விருப்பங்கோள்ளவந்தாய் என்னுடையநாமதேயமென்ன தெரிவசசொல்லடிபெண்ணேதிருட்டுக்கள்ளி

பேரண்டிசொல் விருத்தம்,

நாட்டினேமாளும்வேந்தேநவரத்தினமகுடஞ்சென்னி
சூட்டியபூபாயின்று சொல்லுவேன்கேளுமிந்த
காட்டினிலுலாவுமெங்களை றசவ்னி பேரண்டியெம்பேர்
தாட்டிகமாகவுமைனத்தழுவவேவந்தேனையா

வசனம்

கேளும்மகாராசனே உம்மைக்கண்டமாத்திரத்திலேயான்மிகமில்லாதவிருப்பங்கொண்டு சேர்ந்தணையவந்தேன் என்பேரோபேரண்டன்பெண்சாதி பேரண்டியென்று சொல்லுவார்கள் ஆசையால்கூடுவோம்வாருமமகாராசனே.

ஆர்ச்சுனன்சொல்-விருத்தம்

மருக்கொழுந்தைமுடித்துமையலாய்மருகஎன்னை
பெருக்கமாய்நம்பிவந்தபேரண்டபெண்ணேகேளாய்
உருக்கமாய்த்தவஞ்செய்வோர்கதலகினில்மாசராசை
யிருக்காதுபோம்போம்பெண்ணேயிவ்விடமவிட்டுத்தானே

வசனம.

ஆஆகேளும்பேரண்டப்பெண்ணே என்னைமருக வேண்டுமென்றுவரலாகுமோ மாதவஞ்செய்வோர்க்கு மன்மதகாமமேது இந்தமாய்கையை நீக்கிவிட்டார்கள் கனவிலும்பெண்ணாசையை நினையார்கடந்திடும்பெண்ணே பேரண்டி

பேரண்டிசொல் விருத்தம்

சந்தனசோலைசூழும் சவ்வாதுபுனுகுவீசும்
செந்தாமரைப்பூசோகுபுன்னை செண்பகத்தருக்கள்கோங்கு
விங்கைபாய்பாரிசாதம் விளங்குநல்வாசம்வீச
இந்தப்பூவனத்தில்போகம் இஷ்டமாய்நடத்துவீரே

வசனம்,

வாருங்குஸ்வாமிதவமுனியே பரிமளமான புஷ்பவனத்தினிலேயும்குளிர்ந்தசோலையினிலேயும் மனதுபுண்ணாகாது மருவவாருமென அதுஅபரிமிதமான ஆசையைத்தீரும் மாமுனியே

அர்ச்சுனன்சொல் விருத்தம்

அஷ்டதிசைபோர்புகழு மாதிராபாஞ்சுடரே
இஷ்டமயிருதயத்தி லெண்ணிதவஞ்செய்வோர்கள்
நஷ்ட நெறியுள்ளவர்கள் நிலைத மாமாதர்கள்
துஷ்டபுத்திகாரியாயர் தூரநில்லும்பெண்ணரசே

வசனம்

ஆ ஆகேளும்பெண்ணேபேரண்டி ஆதிபராபரப்பொருளை இருதயத்திலெயெண்ணித்தவஞ்செய்வோர்கள் ஸ்திரீகளாசைவேண்டுவதில்லையினாலவாது செய்யாதே நல்லதிம்பெண்ணேபேரண்டி,

பேரண்டிசொல்-விருத்தம்

முன்னாளிலேவிஸ்வாமித்திரன் மேனகைதன்னையணைந்து
சண்டாளரிஷியுமந்த சகுந்தலை பெண்ணையப்பெற்றான்
அன்றுமேலுமன்றவந்து கேடொன்றுமில்லாது
மன்னுமெய்யோகந்திர மனமகிழ்ந்தணைகுவாயே

வசனம்

கேளுங்குஸ்வாமிராசரிஷியே முன்னாலே விசுவாமித்திரன்தெய்வமேனகையைச்சேர்ந்தனந்தசகுந்தலையென்கிறபெண்ணைப்பெறவில்லையா நீரென்னைச்சேர்ந்தணைந்து போவீர்வாருமன்னவனே.

அர்ச்சுனனுக்கும் பேரண்டிக்கும்-சம்வாததரு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி,

அர்ச்சுனன்சொல்-தரு

தையலேநீதூர நில்லடியென்னைத்
தழுவவேண்டிநீயே சொல்லடி

ஐயமில்லாமலடிக் கிருய்சற்றும்
அஞ்சாமலேதுசந் தொடுக்கிறு இந்த
அடவியிலேவழி தடுக்கிறு-எந்தன்
அருந்தவத்தைதசசுடமாய் கெடுக்கிறாய்
மையல்கொண்டென்றனைதிராசகேளென்று
மசக்குகின்றாவினையப்பசப்புகின்றாய்சிச்சி தையலே

பேரண்டிசொல்-தரு மேற்படி-)-ம் தாளம்

தவமுனியேகிட்ட வாருமே உன்னை
தழுவியொருமுத்தந் தாருமே
அவனிபுகழும்பிசாண நாதனே என்னை
அன்பாகசசேரும்பிரக யாதனே சித்தம்
அலையுதேவருகுதே வேனே ஆதி
அரன்பாதமபோற்றுஞ்சுத் போதனே
குவலயந்தன்னிலிருபே ராருபே சொஞ்சி
கூடுவமேவிளையாடுவோயே ஆகா தபமுனியே

அர்ச்சுனன்சொல்-தரு

ஆரடிநீபொல்லா நீலியோ இந்த
அடவியில்வாழ்யந்திர சாலியோ உந்தன்
ஆணவத்தால்செய்யுங் கேலியோ அடி
அரிவைபேயிதுவென்ன ஜோலியோ
போராடசெய்யத்தொடங்கினையிப்போது
போதிக்கிறுய்மையல்சாதிக்கிறுய்ச்சீச்சீ தையலே

பேரண்டிசொல் தரு

மாணிக்கமகுட கெம்பீரனே என்னை
மருவியணைகுவாய் தீரனே புவி
மன்னவருக்குப காரனே மாது
மையல்தீரும்வெவ் வீரனே
பாணிக்கிரணமென்னைப்பண்ணினுற்போலவே
பார்க்கலாமேசுகந்தீர்கலாமே-ஆ-ஆ தவமுனி

ஆர்ச்சுனன்சொல்-தரு

கிட்டகிட்டவந்து குலேக்கிறாய் உந்தன்
சீர்த்திகளெண்சும்மாப் பலுக்கிறாய் அடி

கெருவங்கொண்டிங்கேநீ தளுக்கிறாய் இலவக்
  கிளியைப்போலென்னுமலமலக்கிறாய்
பொட்டெனவேயிந்தப்பாவ முன்னேவிட்டும்
  போகாதடிமையலாகாதடிச்சீச்சீ தையலே

பேரண்டிசொல்-தரு

மாமுனியேயையல் தீருமோ-உந்தன்
  மாதவங்களு மீடேறுமோ-என்னை
மருகவுன்னிருகண்ணால் பாருமேயிச்சம்
  மயககாமமேலே யினிச்சேருமே
பூமியுமுழுவேனோமிருவோருமாய்ப்
  போகிசகலாஞ்சுகம்பாக்கிசகலாமகா ததமுனி

அர்ச்சுனன்சொல்-தரு

அரக்கிமாதங்கிநீ யாரடிசற்றும்
  அஞ்சாமற்செய்கிறாய் போரடி எந்தன்
அருகினில்வந்ததைக் கூறடி-உன்னை
  அடிக்கிறேனொடிக்குள்ளே பாரடி
  மதிககிராய்வழிதன்னைமாதங்கியுன்னை
  மருகேனடிசுகந்தருகேனடிபாவி

பேரண்டிசொல் தரு

மண்டலம்போற்றும் விஸ்வாசனே இன்று
மருகுவாயென்னை மகாராசனேசித்தம
  மயங்குந்தஜெகத்ப் பிரக்யாதனே-மோக
மாய்கையைத்தீர்த்திடும் போசனே

செண்டுஸ்த்தனமிரண்டும்-விம்மியேமீறுது.
சேர்ந்திடுவீர்களிகூர்ந்திடுவீர்சுவாமி

அர்ச்சுனன்சொல் விருத்தம்

ஆரடிபெண்ணேகேளாயக்கிறமாதங்கியோநீ
போரடிசெய்யவந்தாய்ப்பிணந்தின்னுங்கள்ளிநாறு
ஓடிபாகவின்றுவோடிஞுப்பிழைகதுப்போவாய்
பாரடியுன்றலைப்பாணமியான்றெடுக்கின்றேனே

வசனம்

ஆரடியடி பெண்ணேபேரண்டிநீ பிணந்தின்னுங்கள்ளியோ பிசாசோ தெரியாது இதோசனைதொடுக்கிறேன் உன்றலையைக்காப்பாற்றிக் கொண் டோடிப் பிழைத்தும்போடி அறிவுகெட்டபேரண்டி பெண்ணே.

பேரண்டிசொல் விருத்தம்-

வல்லமைமிகுந்தகோவே வனந்தனில்மருகேனென்றாய்
நல்லதும்னது பிராண நாயகன்றனக்குச்சொல்லி
வில்லுமுனதுயிரை வீறுடன்வைதைத்தேயின்று
சொல்லுகிறேன்பாருயுந்தன் கொழுப்பையுமடைக்கிறேன்,

வசனம்

ஆகாசாசேனுர்கள் அரூரும் ஒப்மகாரிஷியே என்னைச்சேர்ந்ததணைந் துபோகாமல்நடக்கின்றபடியினாலேயுனதுபிராணநாயகருடனேசொல்லி உனது கெருவத்தையடக்கிறேன் ஆகட்டும் ஆகட்டும் ஓய்மாதவமுனியே

பேரண்டன் வருகிற பொதுவிருத்தம்.

அண்டமுங்கிடுகிடென்ன வமரர்கள்மனதொடுங்க
எண்டிசைபுகுந்தங்க இயாவரும்திடுக்கிட்டேங்க
துண்டர்பர்சிரமிண்டாய் துண்டிர்க்கும்வீரசூரன்
கண்டித கழ்பேரண்டன் களறியில்வருகின்றானே.

வசனம்

அகோதெப்படியென்றால் அருச்சுனராசன் தபஞ்செய்யநடக்கும்போது கானகத்திலேவாழுகின்ற செண்டபேரண்டன்தேவலோகமும் அதிரும்படியாக் கொர்ச்சனையிட்டுக்கொண்டு கரத்தினிலம்பு வில்லும்பிடித்து வருகிறவிதங்காண்க

பேரண்டன்வருகிற தரு இம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

மண்டலம்புகழ்சொண்ட பேரண்டராட்சத
மகாபலசாலிவீரனானே திகழ்
சுரரையும் நரரையும் திறமுடன்வென்றிடு மாசாபலசாலி

அநுபல்லவி.

எண்டிசையுமெனதுவிரலாலேற்றிப் போடுவேன்
ஈரேழுலகமிருகரத்தால் செண்டாடுவேன்
கண்டவரைச்சதைப்பேன் சதைப்பேன் கால
காலனையும்வதைப்பேன் வெகு
காதமூடரை வேதனைசெய்திடும்
பாதகர்சிரசை ஆவலாய்மாய்த்திடும் (மண்)

சரணங்கள்.

அண்டரண்டநவகண்ட மண்டலத்தோர்க
ளியாவருமேநடுங்கத்தாக்குவேன் நல்ல

அட்டதிசைமலைகளெட்டையுங் கையாற்றெட்டு
 அகத்தியுலகையெத்திக் தூக்குவேன்
மண்டலந்தனிற்கவி வாணர்தமைப்பழிக்கும்
 மடையப்பசங்கண்மணிக் குடலைகையாற்கிழிக்கும்
மல்லிலெனக்கிணை யில்லையேயெல்லையில்
 வல்லவீரரைக்கொல்லுவேன்வெல்லுவேன் (மண்ட)

துண்டரீடமதத்தைக்கண்டவுடனெஞ்சை
துளைத்து ரசுதத்தைவாரிக்குடிப்பேன் பொல்லா
 துஷ்டராட்சதப்பூதப் பிரேதப்பிசாசுகளைத்
தூக்கிப்போட்டே பொடியாய்ப்பொடிப்பேன்
 ஓட்டையுமியானையமுழுபிரோடேவுட்கொள்ளுவேன்
ஓராயிரங்கரசைச் சாதங்கூடச்சள்ளுவேன்
 ஓர் திறுலுலகங்களில் பேர்பெறும்
வீரனெனக்கிணைபார்தனிலில்லையே (மண்ட)

 சண்டப்பிரசண்ட வுத்தண்டகெண்டரையெல்லாம்
சமர்திறுலெட்டிமாட்டுவேன் பொல்லாச்
 சதிசற்பனைசள்செய்யுர் சண்டாளர்மூடரை
சட்டமாயெமலோகமோட்டுவேன்
 வண்டரானபேர்க்கு வாக்கடிவாளமிட்டு
வாகனமாகவுறிவருவேனேயாகட்டும்
 வஞ்சகதுஷ்டர்களைநெஞ்சைபிளந்துயிர்
வாட்டுவெனென்பலங் காட்டுவேனேயினி (மண்ட)

பேரண்டன் பேரண்டிககுச்சொல் விருத்தம்.

என்னுயிர்க்குயிராய்வாழு மெனபிராணசகியே கேளாய்
மின்னலின்னிடையினாளே மெய்யிளைத்திருப்பதென்ன
அன்னமேநீதா பூண்ட வாடையாபரணமெல்லாஞ்
சின்னவின்னங்களாக சேதியைச்சொல்வாயபெண்ணே.

வசனம்.

ஆ-ஆ-கேளும் என்பிராணசகியே உனதுதேகமெல்லாமிளைத் திருப்பதென்ன நீ பூண்ட ஆடையாபரணமெல்லாம் பொடிப்பொடி யாய்போனதென்ன ஓரேஏகமாய் விசனங்கொண்டிருக்குங்காரணத்தைச்சொல்லுமென்றுசைக்கண்மணியே.

பேயண்டிசொல் விருத்தம்.

சொல்லுவேன்கேளாயெந்தன் சுந்தரமுடையபிராண
வல்லயாயுமா துபாதம் வணங்கியான்புவிக்கேதெண்தேயர்

இல்லாத கேள்ளை தன்னிலிங்கொரு ரிஷியும்வந்து
மல்லாடியணையுமென்று மானமுங்குலைத்தானையா,

வசனம்.

கேளும்பிராணனுக்குப்பிராணனாயிருக்கும் பிராணநாதா தேவரீரிவ்வத்திலே வேட்டையாடப் போனபின்பு இங்கொரு மகாரிஷிவந்துபேசாதல்லாம் பேசி யென்னை மானபங்கஞ் செய்தான்மகுணேஸ்வரா.

பேரண்டன்சொல் விருத்தம்.

மானமுங்குலைந்தேனென்றாய் மடத்தையேசொல்லக்கேளாய்
கானகந்தன்னிலுன்னைக் கற்பழித்திட்டபொல்லா
ஈனனைக்கணைபாலின்றாயிக்ஷணத்தணிப்பேன்ஞானி
போனதெவ்வழியேகாணேன் பெண்ணேநீயுரைசெய்வாயே-

வசனம்.

ஆஹா கேளும் என்னருமைப்பெண்ணரசே இந்தச்சோலைகுழ்ந்தகானகத்திலே உன்னைச்சோரத்தனைந்தபஞ்சமாபாதகனை நெஞ்சைப்பிளந்து எனது பாணபத்துக்கிரைகொடுக்கிறேன் அவன்போனவழியைக்காட்டும் பெண்ணரசே.

பேரண்டிசொல் தரு-இ-ம் கெண்டா.ஆதிதாளம்

காணகத்தில்மாமுனிவன் தானுரைத்ததென்னசொல்வேன்
மன்னவனே என்னைச்

கண்டவுடனேவிரகங்கொண்டணையுமென்றுரைத்தான்
மன்னவனே அந்த

மானபிமானமில்லாஈனனென்மேல்விழுந்து
மன்னவனே அடி

மங்கையேநீவாடியென்றுகொங்கையையவன்பிடித்தான்
மன்னவனே அந்த

மாயங்காரமாமுனிக்கு ஞாயமல்லவென்றுரைத்தேன்
மன்னவனே என்னை

மருகடியென்றுங்கனிருகரம்பிடித்திழுத்தான்
மன்னவனே ஆ-ஆ

ஆயன்செயலென்று யான்மாயன்பாதம்நினைந்தேன்
மன்னவனே எந்த

ஆடையும்பரிசம்வாங்கியாடையும்வண்ணலைத்தான்
மன்னவனே என்னை

மல்லாடியென்னைமருகச்சொல்லாதுகாணீதியென்றேன்
மன்னவனே என்

மருமேனைசன்றானிருந்தால்வெகுமோசம்வருமென்றேன்
மன்னவனே அந்தப்

பாவியவன்மேல்விழுந்து தாவியென்னைத்தாணந்தான்
மன்னவனே அவன்

அன்புடமேசெயிவ்வனத்திற்றென்புடனேதானடந்தான்
மன்னவனே

பேரண்டன்சொல் விருத்தம்.

அடமடமயிலேவுன்னை யணைந்தவன்சிரசைப்பஞ்சாய்ப்
பொடித்திடாவிட்டானும் பிறந்ததுவில் லானல்ல
துடித்திநீபுலம்பவேண்டாம் துஷ்டனைநான்போய்வென்று
நொடிதனில்வருவேன்சிந்தை நோகாமலிருந்திடாயே

வசனம்.

ஆஹா சேனுமபெண்ணே பேரண்டி உன்மீதில் விருப்பங்கொண்டவன் சிரசை ஆயிரம் சுக்கலாய் பிளக்கமடிக்காவிட்டால் என்பேர் பேரண்டனல்ல இதோ வென்று வருகிறேன் அஞ்சாதேயிரும் பெண்மணே.

பேரண்டிசொல்-விருத்தம்.

மடமையானுனக்கு மனையாளுமாவதானல்
அ ராங்கு வனத்திலவந்த வருந்துவ முனியையவென்று
மதாடாந்துநீயவன்சிரத்தைத் துணிந்திடச்செய்துவந்து
வனிந்தனில்வந்தாலின்று எனக்குநீபுருஷன்றானே.

வசனம்.

சேனுமென் பிராணநாயகா என்மேல் விருப்பங்கொண்ட பஞ்சமபாதகனைச் சிரசாக்கினை செய்துவந்தீரானால் யான் உனக்குநான் பெண்சாதி அதுவரைக்கும் நீரெனக்குப்புருஷனல்ல உமக்குப்டாரி நானல்லமன்னவனே

பேரண்டன்சொல்-விருத்தம்.

சற்கரைவார்க்கதைசெம்பொன் றடவரைநிகர்த்தகொங்கை
பொறகொடியுன்னைசசேர்ந்த பொல்லாததுஷ்டனறன்னை

தற்கஞ்செய்தவனேயின்று தலைகளைத்தறித்துயானு
மிக்கணம்வாரேன்பெண்ணே யிவ்விடம்மிருப்பாய்கண்ணே.

வசனம்.

ஆஆ கேளு மென்னருமைப்பெண்ணரசே உன்னை மானபங்கம்பண்ணின மாதவமுனியைக்கண்டு யுத்தஞ்செய்துவருகிறேன் இவ்வனத்திலே பதனமாயிரும்பெண்ணே பிராணசகியே.

அர்ச்சுனன்போகிறதைபேரண்டன்பார்த்து,

சண்டைசெய்கிற-விருத்தம்.

ஆரடாரிஷியேநீதா னடவியிலெனைத்திரும்பிப்
பாரடாவுனதுவீர பராக்கிரமமறியவேணும்
போரடாசெய்பவந்தேன் புத்திகெட்டவனேவாடா
கூரடாவுன்றன்மணிக் குடலையுமெடுக்கின்றனே,

வசனம்.

ஆரடா அடாரிஷியே இங்க ஆரண்யத்திலே எனதுபாரியாளை மருகிப்பேசாமல் நடக்கிறாய்நல்லதாகட்டும் இப்போதிருவருமயுத்தஞ்செய்யலாம்வாடா அறிவுகெட்டமாதவரிஷியே.

அர்ச்சுனன்பேரண்டனுக்குச்சொல்-விருத்தம்.

குடல்தனையெடுப்பேனென்று சொக்கரிச்சிடும்பேரண்ட
கடலதுவுரைத்தாற்பாரிற் கனகிரியணைகளாமோ
அடல்பெரும்வனத்திலென்மே லடாங்கிதைபோடவந்தாய்
விடவிடப்பேசவேண்டாம் விலகிநீயப்புறம்போடா

வசனம்.

ஆரடா அடாசெண்டபேரண்டா சமுத்திரமானது உடைந்தால் மலைகளாகப்போகுதா இந்தசோலைசூழ்ந்த கானகத்திலே என்மேல் அடாங்கிதைபோடவந்தாய் போடாபோ யுத்திகெட்டபேரண்டா.

ம

போடாவென்றுரைக்கவந்தாய் போரநாயல்லகண்டாய்
தாடாண்மையானவென்றன் தாரத்தைவிரும்பலாமோ
மூடாவுன்றனையிப்போது முறிக்கிறேன்மோசமில்லை
வாடாயென்னெதிரில்சந்திர வாட்கிரைகொடுக்கின்றேனே

வசனம்-

ஆஆ ஆரடா அடாவேலைமெனக்கிட்ட ஆண்டிப்பயலேஒருவன் பெண்சாதி ஒருவனுக்குத்தாயாச்சுதே அப்படிக்கிருக்க அடாநீயெப்

படியென்பெண்சாதியை யாருநீடக்கின்றாய் உனையெனதுசந்திராயு
துக்குஇரைகொடுக்கிறேன் டாரடாமாதவா.

ஆர்ச்சுனன்சொல்-விருத்தம்.

பெண்மொழிகேட்டோரெல்லாம் பேயனென்றுரைப்பாரில்
தன்மையாலென்சொன்னாலுஞ் சிரித்துப்போர்செய்யவந்தாய்
வண்மைசேருன்பெண்சாதி வார்த்தையைநம்பிவடாம
கண்முடியுயிரைமாய்க்கக் கடிதுகொள்ளாதேபோடா

வசனம்.

ஆரடா அடா பேரண்டா பெண்சாதிவார்த்தையைக்கேட்டுஎன்
னுடனேபோராளவரலாகுமா பெண்மொழிகேட்கப்படாது பேயனே
இன்றுதான்கண்டேன் அடாகாட்டிலேதிரியும்பேரண்டப்பயலே-

பேரண்டன்சொல் விருத்தம்

அறிவுகெட்டவனேயெற்றன் அரிவையையுணர்ந்ததல்லால்
மொறுங்கியவெறியனே போல மொழிகளைப்பகரவேண்டாம்
கெருவங்கொண்டவனேயின்று கொல்லுகிறேன் நொடிக்குள்ளுனை
கருவறுக்கிடவன்வந்த கனவீரனறிகிலாயோ

வசனம்.

அடா வாடா வெறிகஞ்சாக்குடியனே உனது செருவத்தினாலேவி
ருதாவாய்ப்பேசவேண்டாம் நில்லே நீயுமானும் ஒருகைப்பார்ப்போம்
சாமர்த்தியமிருந்தால் யுத்தஞ்செய்யலாம் வாடாமடைய
னென்னும்மாதவா.

ஆர்ச்சுனன்சொல் விருத்தம்,

கற்புள்ளசீதையாலே கனத்தராவணனுமாண்டான்
வற்புகழ்மேவுவாலி வனிதைதாரைகையால்மாண்டான்
அற்றனும்மனையாளனவரிவைதன்மொழியைநம்பி
இப்புவிதனிலுஞ்சீவனிழப்பதுந்திடமாமே

வசனம்.

கேளடா அடா பேரண்டாமூடா சீதையாலேராவணன் மாண்டா
ன்தாரைகையாலேவாலிமாண்டான் அதுபோல உன்பெண்சாதிமொழி
யினாலேநீமாளப்போகிறாய் பேசாதேஓடிப்போடா மடையனென்
னும்பேரண்டப்பயலே,

பேரண்டன்சொல் விருத்தம்,

மாதவஞ்செய்தவோர்க்கு மன்மதகாமமேது
பூதலமாய்கையேது பூவைமேல்விருப்பமேது

பாதகா யென்றூரத்தைபரிவுடன்புணர்ந்துபோக
நீதியோஉனக்கிப்போதுநினைவடங்காதோசொல்வாய்

வசனம்

ஆ ஆ-என்றூயிருக்குது அல்லடா அடாமாதவஞ்செய்வோர்களுக் குதாரணியாய்வகையேது இனைதநீக்கிவிட்ட பெரியோர்களும் ஊ ம்பெண்ணுடனசந்தேயோகமெனநீ நினைக்கத்தகுமோசொல்லடா அடாபா தவா

அர்ச்சுனன்சொல் விருத்தம்

எத்தனையான்சொன்னாலுமென்னையேகூடுமென்றாள்
பெற்றதாயச்சேயென்லவைபேரண்டமூடாகேளாய
சித்தினிச்சிறுக்கியென்மேற்சீக்கிரம்விழவேவந்தாள்
கர்த்தனைத்துதித்துநின்றேன்கானகந்தனிற்சென்றாளே

வசனம்

அடாவடாவெண்டபேரண்டாஉனதுபெண்சாதிக்கு அனேகவித த்திலேயுஞ்சொன்னேன் பெற்றதாயென்றுமசொன்னேன்மேல்வி முந்தணையவந்தாள் ஈசனைதுதித்துநின்றேன் இந்தகானகத்திலேம றைந்துபோய்விட்டாள்போடாபுத்திகெட்டவனே.

பேரண்டன்சொல்-ஆசிரியவிருத்தம்

போடாவென்றுரைத்துநிற்குமுனியேகேளாய்
பொற்கொடியென்பெண்சாதிபொய்சொல்லாளே
தடாணமைநீயுரைத்ததாலெனக்கொட்பாது
தப்பாமல்பொழுதேயுனைச்சோதிப்பேன்
மூடாகேளுன்றனைக்குமுகத்தில்மீசை
முறுக்குமேனேதானிருக்காதேன்முண்டாக
வாடாநீயுன்னுயிரோயென்கைவாளால
வாட்டுமுன்யமலோகமவோட்டுறேனே

அர்ச்சுனன்சொல் ஆசிரியவிருத்தம்

ஓட்டுறேனெமலோகமென்றுசொன்ன
வுணர்த்திகெட்டகாதகனேநீதானென்னை
வாட்டுதற்குதிராணியுண்டோபோடாவுன்றன்
வல்லமைதானென்னிடத்திற்சொல்லாதேடா
ஆட்டுமயிர்தன்னிலரைமயிருன்னாலே
வசக்கவுந்தான்திறமையுண்டோவாடாமூடா
காட்டுக்குள்ளேதிரியும்பேரண்டாவென்றன்
கைக்கிணைச்சேயினரதாகக்காலமாச்சே

பேரண்டன்சொல்-ஆசிரியவிருத்தம்.

கெட்டகாதகனேநீகெருவங்கொண்டாய்
கெருடன்முன்னேபாம்புதான்வெல்வதுண்டோ
பொட்டனவேயுன்னொஞ்சைப்பிளப்பேன்கண்டாய்
போராடாவுலகத்திலெனைப்போலுண்டோ
துட்டனேயெனைச்செயிக்கவொருவருண்டோ
துண்டிப்பேனுன்சிரசையிரண்டுதுண்டாய்ச்
சட்டமுனியான்பிடித்தவில்லினாலே
சாதிப்பேனுன்னுயிரைவதிப்பேனே.

அர்ச்சுனன்சொல்-ஆசிரியவிருத்தம்-

வாதிப்பேனென்றுசொன்னபேரண்டாகேள்
வாய்மொழியினாற்பந்தலிடவேவச்தாய்
ஆதித்தன்தனைக்கண்டபனிநில்லாது
ஆளியின்முன்மதயானையதுவெல்லாது
சாதிப்பேனியானுன்னையறிந்திலாயோ
சங்கைகெட்டகாதகனேஷாத்தேன்சும்மாய்
போதித்தாலாவதென்வுனதுமண்டைப்
பொடிபடவேபிளக்கடிப்பேன்பிழைத்துப்போடா

பேரண்டனுக்கும்-அர்ச்சுனனுக்கும்-தற்கதரு

இ-ம்தோடி-தாளம்-ஆதி.

போடாபோடாவென்றுபுகலுவதென்னடா
போர்செய்துயிட்சணம் வெல்லுறேன்-அடா
மோசசையாய்த்தட்சணம் கொல்லுரே இந்த
தாண்மைபேசாதே போடாகுடிகேடா
தபபாமற்சாதிப்பேன் மாதா

அர்ச்னன்சொல்-தரு-மேற்படிராகம்-தாளம்

தப்பாமற்சாதிக்கவொப்பாதுயிப்போது

தாக்கிறேனுந்தனைப் பாரடா-பஞ்சா
யாக்கிறேனைப்புறங கூரடா-எனக்
கொப்பாதவார்த்தையைச் செப்பாதேயுன்றனை
கொல்லுறேன்பார்கெண்டபேரண்டா

பேரண்டன்சொல்-தரு

கொல்லுறேன்வெல்லுறேனென்றெண்ணி வீணை
கொககரித்தேன்சும்மாமலேகிறாய் வெ

குக்கனைப் போலிங்கே நிலைக்கிறாய்-அடா
மல்லுக்குநில்லுமே சாலுமபெலம் பார்ப்போம்
மடையனே வெல்லடா

ஆர்ச்சுனன் சொல்-தரு

படையனென்றென்று நீ கடையனே யுன்றன்
மடிக்கிறேன் முடிக்கிறேனே — வெல்லடா வில்லா
லடிக்கிறேன் முடிக்கவே — நில்லடா உந்தன்
தொடையுமிடையும் மார்பும் — தடையில்லாமலொடிய
துளைக்கிறேன் பாரடா கெண்டபேரண்டா

பேரண்டன் சொல்-தரு

துளைக்கிறேனென்றெண்ணியிளக்காரமாய்ச் சொல்லித
தாப்புந்தியாலே — யுருட்டுராய அடா
நிறைப்போ நீயென்முன் — மிரட்டுராய தேகம
களைக்கவே புன்மண்டையிளக்கிறேன் பொடியாகக்
கனைவிட்டேன் பாரடா — மாதவா

அர்ச்சுனன் சொல் தரு

கணைவிட்ட திறலென் கைக்கிணையாவையோ போடா
காட்டில்வாழுங்குடி — கேடனே பெண்
டாட்டிசொற்கேட்டிடும் — மூடனே சும்மா
யனைத்தேனும் பெண்ணையும் புணர்ப்பேனென்றெண்ணாதே
ஆட்டுமடா கட்டுமே பேரண்டா

பேரண்டன் சொல் தரு

வீரமாகப் பேசுகட்டுமெண்ணாதே
வில்லினாற்றலை — பிளப்பேன்-தேகம்
சல்லடைக்கண்களாய்த் — துளைப்பேன் வெகு
சூரவீரனே விஸ்தாரமாய பேசாதே
சொன்னேன் சொன்னடா மாதவா

அர்ச்சுனன் சொல் தரு

பனங்காட்டுநரிசலப்புக்கஞ்சாதென்று
பார்த்திருந்தும் வீணாய் — பேசுறாய் உந்தன்
சாஸ்திரங்களெல்லா — வீசுறாய்-இந்த
வனமதிலுன்னுயிர் — க்ஷணமதில்போகவே
வருகுது பார்கணை — பேரண்டா

பேரண்டன்சொல்-விருத்தம்,

அய்யையோதெய்வமேயானறியாமற்றஜங்கெடுத்தேன்
வுய்யவேகணைசள்மார்பிலுறுத்ததுஎன்னசெய்வேன்
மெய்யெங்கும்பசைசகுநிபபோமெல்லியையருகிற்காணும்
தையல்பாகனேயுன்றன்தாளிணைத்தருகுவாயே

சபையோர்சொல்-பொதுவிருத்தம்.

வாரிசூழுலகந்தன்னில்வள்ளலைக்காணநெஞ்சிற்
கோரியேதவத்தைச்செய்யகொற்றவனடக்கும்போது
வீரியமிகும்பேரண்டன்விசையனுமடிந்தபோது
பாரினிலவன்பேரண்டி பதறுவாளகதறுவாளே

வசனம்

அகோகேளுங்கள்சபையோர்களேஅர்ச்சுனனுடையபாணத்தாலேகொண்டபேரண்டன்மூர்ச்சையாய்விழுந்தபோதுபேரண்டிப்பட்டதுபிலமபுகிறவிதங்காணக.

பேரண்டிசொல்-விருத்தம்-இ-ம்-சண்டா.

பட்டுதோபிராணநாதா பாணமுந்துளைத்ததோதான்
எட்டுத்திக்கதிர்ந்துபோகவென்னமாய்த்திடுக்கிட்டாயோ
கட்டுடன்கனமாயன்பால்கனமுடன்வாழ்ந்தயென்னை
விட்டுநீர்பிரியபிரமன்விதித்தவாககினையிதானோ

பேரண்டிபுலம்பல்-தரு.

இ-ம்-காம்போதி தாளம்-ஆதி

பல்லவி,

எப்படிப் பிழைப்பேன்-பிராணநாதா
என்னமாய்ப் பிழைப்பேன்

அநுபல்லவி,

இப்படியாயனெழுதிருப்பேனோ
என்னமாயும்மைவிட்டுமிருப்பேனோ (எப்ப

சரணங்கள்,

கர்த்தனேமுனி கணையாலடித்தானோ
காணகந்தன்னிலுனை மடித்தானோ
வித்தகாதேகம்பஞ்சாய்ப் பொடித்தானோ
வில்லினாலுந்தன்மார்பி லடித்தானோ-எப்

எப்படியெப்படிவிட்டுப் பிரிவேனோ
யேழையைப்போலவேயேங்கித் திரிவேனோ
இப்படிவருமென்றறியானு மறிவேனோ
இட்சணமென்னுடல்கொய்து மெறிவேனோ-எப்

மகுணனைவிட்டுமண்மேற் படுப்பேனோ
மாபாவியென்னுயிர்மாள விடுபவேனோ
சுகிர்தமானஎன்வாழ்வைக் கெடுப்பேனோ
துரோகியென்றும்பேர்பாரினி லெடுப்பேனோ எப்

பேரண்டிசொல்-விருத்தம்.

பழிபுண்டோமுன்னாட்செய்தபாவமோபிராணநாதா
இழில்பெறமுனிவருன்மேலெய்திடுக்கணைகள்பட்டு
விழி ள்பஞ்சடைந்துபிராணன்விட்டதோதெய்வமெல்லை
முழுதிலுங்கெடுத்ததைதையோ முதல்வனையென்றுகாண்பேன்

இதுவும்பேரண்டிபுலம்பல்-தரு

இ-ம் எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி

பாவிமுன்சென்மத்திலெனனதீவினைசெய்தேனோ ஐயோ
பிரமமதேவா யான்
ப்ாதகியெனதுபிராண நாதனைப்பறிகொடுத்தேன்
பிர்ம்மதேவா
மேவிமண்மீதில்விழுந்தென்னுவிளையொழிப்பேனோதான்
பிர்ம்மதேவா இந்த இந்த
மேதினியளந்தவேன் ஆதிமால்செயலிதுவோ
பிர்ம்மதேவா
முற்பிறப்பில்செய்தபழியிப்பிறப்பில்மூண்டதோதான்
பிர்ம்மதேவா அந்த
முக்கணனாதன்செயலோ மைகக்கண்மாதுயான்புலம்ப
பிர்மமதேவா
இப்படியென்சென்னிதன்னில் எப்படியெழுதினேயோ
பிர்ம்மதேவா ஐயோ
இந்தசேதியெந்தனுககு வந்தவிதிதானோயிது
பிர்ம்மதேவா வந்தவிதிதானோயிது

பேரண்டிசொல்-விருத்தம்-இ-ர்-கெண்டா

எப்படியென்னசெய்வேனென்னுயிர்ப்பிராணநாதா
இப்படிந்தலையிலாயனா எழுதிவைவிட்டதோ
முறப்பிறப்பினிலேசெய்தமூண்டதீயனேயோவையா
எப்படியுனைப்பிரிந்து எல்லையிருப்பேன்பாவி.

இதுவுமது-நரு-இ-ம் கெண்டா-ஆதிதாளம்

கண்ணிகள்,

ஐயோநானென்னசெய்வேனிஐயோ-பிராணநாதா-அன்று
ஆயனெழுதினதுமாயமிதுதானோ பிராணநாதா
நையலென்போலபாவிவையகத்திலுண்டோ பிராணநாதா-இப்போ
தாளமணியார்படுமுருளத்தலைவிதியோ பிராணநாதா
சுத்தனேயென்வயிற்பதறிவெரியுதே பிராணநாதா சட்டி
சுட்டதபோலுந்தனைகைவிட்டாறபோலாகிறைய பிராணநாதா
நற்றவமுனிகளென்னமுற்றருசெய்த யோகீ பிராணநாதா இன்று
நட்டாற்றிலென்னைசைவிட்டாயோஐயோ பிராணநாதா

இதுவுமது-பேரண்டிசொல்-விருத்தம் இ ம-மூகாரி

என்னுயிர்ப்பிராணநாதா எப்படிமனதுணிந்து
உன்னையுமபிரிந்துயானுமுலகில்வாழ்ந்திருக்கலாமோ
இநலையமைந்த பண்கள எவ்போலும்பாவியில்லை
ஆமனாக தந்தானிட்ட ஆக்கினையறிகிலேயனே

இதுவுமது சரு இ-ம் நீலாம்புரி ஜம்பைதாளம்.

கண்ணிகள்.

அருமுனிவனிவிட் விடுத்த ணையனேயுன்மார்பிற்பட்டு
அடவிதனிற் மடியவிதி அயனுமவிதித்தாரோ
ஒருநாளும் பிரியா கமணவாளன்றனைப்பிரிந்து
ஒரித்தியாய் தரிதிரியவிதி அயனுமவிதித்தாரோ
திருவுளத்திரன்செயம் துயோதிகழ்கனத்திலியான்முடிந்து
திகைகப்பதமூ தலைபில்விதி அயனுமவிதித்தாரோ
மருகஇருவோருமிப்படிமகிழ்ச்சியுடன்வாழ்ந்ததுபோய்
மாபாவியாகவிதி அயனும்விதித்தாரோ
வாரிசூழ்வையகத்தில் வண்ணமையுடன்வாழ்ந்துஎன்னை
வனமதில்விக்கவிதி அயனும்விதித்தாரோ
பாரிலெங்கன்மருமணையுமே பரிகொடுத்துக்கானகத்தில்
பரதேசமாகவிதி அயனும்விதித்தாரோ

நீலிடுக்குமிழைப்போற் நிமஷத்திலுன்னுயினா
நெடியசிலையால்மடிக்க அயனுர்விதித்தாரோ
வீரியனைஅசுராகுலம் விளங்குவர்ப்பிராணேசா
விட்டுவென்னைப்பிரியவிதி அானும்விதித்தாரோ

பேரண்டி-அர்ச்சுனனுக்குச்சொல் விருத்தம்,

சகலெலாம்புகழ் மன்னுவுன் திருவடிசரணம்போற்றி
பொற்கொடிசெய்குற்றம் பொறுசதுராசிக்கேனும்
பாதகஞ்செயநிடு பேரண்டன் தன்னைநீரெழுப்பியெந்தன்
துக்கத்தைத்தீர்க்கவேணும் துய்யமாதவனேபோற்றி,

வசனம்.

சரணஞ்சரணம்மகாசாமீனே அடியாள்என்னகுற்றஞ்செய்தா லுமதேவரீமனம்பொறுத்து என்னுடைய பிராணநாயகரை யெழுப்பித்தரவேணுஞ்சுவாமி,

அர்ச்சுனன் பேரண்டிக்குச்சொல் விருத்தம்.

தாவினுறசிகைசாத்திற் றட்டாமற்போனாற்பாதம்
மேவியேயணியுமகளளிமெல்லியுன்னிடத்திற்கண்டேன்
பாவிபேரண்டன்றானும் பாரினிலெழுந்துவந்தால்
தீவினைவிளைவியபாயோ தீருநீயுரைசெய்வாயே.

வசனம்.

ஆரடி அடிபெண்ணேபேரண்டி என்னடி வெட்டினால் சிகைகரத்திலேயும், எட்டாவிட்டால் இரநகிககாலேப்பிடித்துக்கொளகிற சள்ளிநீயேயல்லாமல் வேறேயில்லை பேரண்டன்யெழுநதுவநதால் இன்னஞ்சண்டோ சொல்லடி சொல்மாங்கி.

பேரண்டி-அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்.

அன்னமிட்டவாகளுததுரோக மடுத்துலகினிற் செய்வாரோ
நானிலத்துஷ்டாசெயவார் நல்லவாசெயயாரையா
இன்னமெழுநதுஜமுமில்லை யிடர்நன்றிதீஙகுமிலலை
மன்னனேமகுணபிக்ஷை மடிப்பிச்சைதநதிடாயே

வசனம்.

சேனுமமகாராசனேஅன்னமிட்டவர்களுக்குத்துரோகம் நல்லவர்கள் செய்யமாட்டார்கள்நன்றிகெட்டவாகள்செய்வார்களே யல்லாமல்நான்அப்படிசெய்கிறதில்லை தேவரீர்தயவுவைத்து என்மணவாளனை எழுப்பித்தாருஞ்சுவாமி முனீஸ்வரரே.

அர்ச்சுனன்சொல்-மட்டுவிருத்தம்.

துஷ்டபேரண்டா துலங்கியஉன்னுயிர
நஷ்டமில்லாமல் நலமதாயின்று
அஷ்டதிக்கெங்கு மதிர்ந்திடவணத்தில்
இஷ்டமாயெழுந்து யினிவருவாயே,

பேரண்டன்-உயிர்பெற்றெழுந்து

அர்ச்சுனனுக்குச்சொல்-போற்றிவிருத்தம்.

தழைத்தகானகத்தில்வந்த தசதிமாமுனியேபோற்றி
அழைக்கிடும்போதேவந்தேன் அடியனைக்காக்கவேணும்
பிழைத்த துன்செயலேயான்செய்பிழைதனைப்பொறுக்கவேணு-
ம், செழித்ததிண்புயனேசெம்பொற் றிருவடிபோற்றிபோற்றி

வசனம்.

சரணஞ்சரணம் ராசரிஷியே அடியேன்செய்தகுற்றமெல்லாம் தாங்கள்திங்கென்று நினையாமல்பொறுத்துரட்சிக்கவேணுங்கர்த்தனே

அர்ச்சுனன்-பேரண்டனுக்குச்சொல்-விருத்தம்.

பொங்கமாயடிபணிந்த பொல்லாதபேரண்டா்கேள்
திங்கள்சூழுலகந்தன்னிற் றிகழ்பெறுமுனிவரின்னஞ்
சங்கரனடியார்வந்தால் சரணமென்றடிபணிந்து
பங்கமாயத்தடுத்திடாமல் பதலமாயனுப்புவாயே,

வசனம்.

அடாவடா மூடப்பெட்டிமகனே இந்தப் பூமண்டலத்திலே சிவனடியார்கள் வந்தால் பயபக்தியுடனே அடிபணிந்து அனுப்பிவையும்பி ள்ளாய் இனிநான் தவத்திற்குநடக்கிறேன்பேரண்டா.

பேரண்டன்சொல் விருத்தம்.

அண்ணலேகேளீருந்தன் ஆக்கினைப்படிநடப்போம
பண்ணதுமுற்றும்நானும் பட்டதுபோதுமையா
விண்ணவர் புகழுகின்ற விளங்கியசிவனைநோக்கி
திண்ணமாய்த்தவத்தைச்செய்ய தேவரீர்நடந்திடீரே

வசனம்.

கேளுமையா ராசரிஷியே தேவரீர் திருவாக்கினாற் சொன்ன மொழிப்படிக்கு அடியேன் நடந்துக்கொள்ளுகிறேன் தாங்கள் கயிலாசபதியைநோக்கி அகோரமாய்த்தவஞ்செய்ய நடவுங்களையா முனிசிரேஷ்டரே.

பொதுவசனம்

இந்தப்பிரகாரம்சொன்னபேரண்டத்தில்அர்ச்சுனமகாராஜாவினடைபெற்றுக் காடுமலைவனமலைனைத்திரங்களை யெல்லாங்கடந்துவடதிசைக் கயிலாயத்துக்கருகில்ஓர்மலையினடிவாரத்திலிருந்து அகோரமாகிய தவஞ்செய்கிறவிதமெப்படியென்றால்.

அர்ச்சுன—சொல் தரு இ-ம்-தோடி-தாளம்.ஆதி

பல்லவி,

விடையாளா-சூலப் பணையாளா-கங்கைச்
சடையாளா என்னையாளா

அநுபல்லவி.

உடையாள்சிறுதுடி-இடையாளிளமபிடி
நடையாள்வஞ்சகருள-அடையரள்மருவிய (விடை)

சரணங்கள்

அடிக்கடிசோதனை பணணாதே-என்னை
யகலவிடமனதி லெண்ணாதே
தடுக்குமாய்கைக்குள்சும்மாய் நண்ணாதேநம்பும்
தமியேன்மனஞ்சிதைக்க வொண்ணாதே
அடுகருமிவ்வேளையென்னை ஆதரித்தருள்கூரும்
அகத்துக்கவலைநீக்கி-யருட்கண்ணாற்சற்றேபாரும் (விடை

தேவேந்திரன்-கொலுவுக்குவருகிற-பொதுவிருத்தம்

அரியமாதவத்தோர்போலஅர்ச்சுனன்தன்றவத்தைப்
பிரியமாய்கவிரிமேல்நின்றுபெட்புறச்செய்யும்போது
உரியதேவர்களாலந்தவுளவையுமவன்கருத்து
தெரியவேவேணுமென்றுதேவேந்திரன்வருகின்றானே

பொது-வசனம்

அகோதெப்படியென்றால் அர்ச்னன்தபஞ் செய்யும்போது அவன் தகப்பனான தேவேந்திரமகாராசன்அந்தத்தபநிலையைத்தன்னாலும்பிறராலும ஆலோசனைசெய்து அறியும்படி தேவேந்திரமகாராசன்தன்கொலுவுக்குவருகிறவிதங்காண்க

தேவேந்திரன்-கொலுவுக்குவருகி-தரு

இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

பல்லவி

தேவேந்திரமகாராஜன்வந்தான்
தேவேந்திரமகாராஜன்வந்தான்

அநுபல்லவி

தேவேந்திரர்கள்புகழ்ந்து போற்றுமகா அதிபதி
பொன்னின்முடி சிரசிலுன்னதத்துடன் னன்று
சொர்னகிர்த்திபுகந்-தன்னிலிருந்து மின்ன (தேவே)

சரணங்கள்.

கரத்திற்செங்கோ டாட இருபுறமுங்
கைகூப்பிதேவர் நாட
உரத்தில்ரத்னபதக்க வொளிமெயகுஞ்ஜொலித்திட
உற்றமாதவர்கள் சுற்றிவாழிசொல்ல
கற்றமறையவர்கள் பற்றிவர நல (தேவே)

பாவையிந்திராணிகருத்து-மென்மேலுமகிழ்
பருகப்பருகச்சிரித்து
ஆவலுடன்ரமபையூர்வசிமுதலானோர்
ஆடியிசையுடனே பாடிய வருமொன்றாய்க்
கூடிப்புளகிதகொண்டாடிவர நன்றாயத (தேவே)

பேரிகைபூரிகை அடிக்க-தவளக்குடை
பிரபேசிலர் பிடிக்க
காரியகாரணர்களுனடியைக்கண்டு
காட்சிப்பெறும்விசயன் அபேட்சைதீர்ந்திடவும்
மாட்சிமைபாபொரு-சூட்சிபகர்ந்திடவும் (தேவே)

தேவேந்திரன்-கடவுளுக்குப்போற்றிவிருத்தம்.

எங்கினுந்தானேதானாயிருந்துகாப்பவனேபோற்றி
பொங்குமாதவர்களுழைப் போககடிப்பவனேபோற்றி
சங்குசக்கரத்தைக்கையிற்றரிப்பவாபோற்றிபோற்றி
எங்களைரட்சித்தாளுமெழில்வண்ணாபோற்றிபோற்றி

தேவர்கள்-தேவேந்திரனுக்குப் போற்றிவிருத்தம்

சுந்தரந்தனிலுநல்லசொல்லினுமொப்பில்லாத
இந்திராணியெனுமின்னுமிச்சையாய்மெச்சுகின்ற
ஐந்தருநிழலில்மேவியமரரைப்பாதுகாக்கும்
இந்திரனேயுனதுசெம்பொனிணைஅடிபோற்றிபோற்றி

இதுவும் தேவர்கள்-தேவேந்திரனுக்குப்-போற்றிவிருத்தம்

எந்நிலத்தோருமெச்சும்இறைவனேபோற்றிபோற்றி
மன்னியகரத்திற்கொண்டவச்சிராயுதனேபோற்றி

தன்னிகரொருவரில்லாச் சசிமணவாளாபோற்றி
பொன்னுலகதனையாளும் புரந்தராபோற்றிபோற்றி

பொதுவிருத்தம்,

ஊர்வசிரம்பைதிலோத்தமை நடனஞ்செய்ய
கருட காந்தருவர் சித்தர் சுற்றமாமவர்கள்சூழ
அருமையிந்திராணியென்னு மரிவையினுடன்மகிழ்ந்து
சதுரினிலிருந்து புரந்தரன் சாற்றுவான்சாற்றுவானே,

பொதுவசனம்.

அதோகேட்பபடியென்றால் அரம்பை மேனகை ஊர்வசி திலோத்தமை முதலானவர்கள்நடனஞ்செய்யவும் தேவர் முனிவர்கருட காந்தருவர்கள் அருகினில் தேவேந்திரன் வீற்றிருந்துசொல்லுகிறவிதங்காண்க.

தேவேந்திரன்சபையோர்களுக்குச்சொல்-விருத்தம்.

மொழியுமிச்சபையிலுள்ளமுனிவரேகேளீரெந்தன்
அழகியமைந்தனை அருச்சுனன்சிவனைநோக்கி
வழுவரக்கைலைதன்னில் மகாதவஞ்செய்யுகின்றான்
தழுவுமத்தவஞ்சோதிக்கத் தந்திரமொன்றுசொல்வீர்,

வசனம்.

கேளுங்கள்இந்தச்சபையிலுள்ள ரிஷிகளே தேவர்களே என்னுடையகுமாரன் அருச்சுனன் கைலாசபாரிசத்திலே பரமசிவனைநோக்கி உக்கிரமானதவசுசெய்கிறான் அவன்தபோபலனைப் பரிசோதிக்கும்படியே ஒரு உபாயத்தைச் சொல்லுங்கள்பார்ப்போம்சபையோர்களே.

தேவர்கள் தேவேந்திரனுக்குச்சொல்-விருத்தம்.

முனிவர்கள்செய்தவத்தை முழுதுஞ்சோதிக்கவென்றால்
வனிதையர்தமைக்கொண்டே மனவலியறியவேணும்
இனியமற்றொன்றாலாவ திலையாகையாலெவ்வாது
தனியனாந்தனஞ்சயன்செய் தவத்தைச்சோதிக்கலாமே,

வசனம்.

கேளும்தேவேந்திரமகாராசனே ரிஷிகளுடைய திடச்சித்தமறியவேண்டுமானால் ஸ்திரீகளாலேயல்லாமல்வேறொருவிதத்தினாலும் அறியக்கூடாது ஆகையாலே உன்குமாரனான அர்ச்சுனன் செய்யப்பட்டதபோபலத்தை ஸ்திரீகளைக்கொண்டேயறியவேணும் தேவேந்திரமகாராசனே.

தேவேந்திரன்-தேவர்களுக்குச்சொல் விருத்தம்.

சரிபிதுநன்றாய்ச்சொன்னீர் சபாசுமுன்தயத்தைச்செய்த
பெரியவரெல்லாங்காமப் பெண்களின்வசமானார்கள்
பிரியமாமாச்சுனன் செய்பெருந்தவத்தையுமவ்வாறே
தெரிவையாதம்மைகொண்டு க்ஷணத்தினிலறிகுவேனே,

வசனம்.

கேளுங்கள்தேவர்களே சரிசரி ஆஆ சபாசுநன்றாய்ச் சொன்னீர்கள் முன்பு தவத்தைச் செய்தவர்களெல்லாம் பெண்களுடைய கைவசமானார் போதவிர வேறில்லை ஆகையினால் இந்நாளொருநிமையம்பொழுதிலே அர்ச்சுனனுடைய தவத்தையும் அப்படியேபரிசோதிப்போமர்தவர்களே.

தேவேந்திரன்-ரம்பை-மேனகை-ஊர்வசி திலோர்த்தமை.

முதலோர்களுக்குச்சொல்-விருத்தம்

பேர்பெரவிளங்குந்தெய்வப் பெண்களேசொல்லக்கேளீர்
ஏர்பெருமெனதுமைந்த னிலகுவில்விஜையனந்த
சீர்பெருகைலைதன்னிற் றிருத்தமாய்த்தவஞ்செய்கின்றான்
நேர்பெறச்சென்றவன்ற னிலைதனைச்சோதிப்பீரே,

வசனம்.

கேளாய் ரம்பைஊர்வசி மேனகை திலோத்தமை யென்னும் பெண்களே என்குமாரனை அர்ச்சுனன் கைலாயத்தில் பரமசிவனை நோக்கிதவஞ்செய்கிறான் நீங்கள்போய்யவன் மனவுறுதியைச்சோதித்துவாருங்களபெண்களே.

நடனப்பெண்கள்-தேவேந்திரனுக்குச்சொல் விருத்தம்.

ஒப்புறுசுவர்க்கலோகவம்பர் நாயகனேகேளீர்
செப்பவாரியெமறள்ளையிற் சிக்காதேபேர்களுண்டோ
அப்படியேயுன்மைந்தனருச்சுனன்றிடச்சித்ததை
தப்பறவேசோதித்துச்சடுடன்வருவோமே,

வசனம்.

கேளுஞ்சுவாமி சுவர்க்காதிபதியான தேவேந்திரமகாராசனே எப்போப்பட்டரிஷிகளாலுமெங்கள் கைவசமாகாத பேர்களுண்டோ தேவரீருத்தரப்படிக்கு அந்த அர்ச்சுனராசன் தபோபலத்தைப்பரிசோதித்து வருகிறோம்சுவாமி.

தேவேந்திரன் பெண்களுக்குச்சொல் வசனம்.

ஆனால் அப்படியேபோய்சசீக்கிரமாயப பரிசோதித்து வாருங்காமபெண்களே.

நடனப்பெண்கள்வருகிற-டோதுவிருத்தம்.

உருவசிமேனகையுயர் திலோர்த்தமை
ஒருமையாமரம்பையென்றோர் நமாதர்கள்
தருநிலையருச்சுனன்றவஞ்செய்கின்றிடம்
மருவுடர்கைலையில்வந்துதோன்றினர்,

நடனப்பெண்கள்வருகிற-தரு-இ-ம் பந்துவராளி ஆதிதாளம்

பல்லவி.

ஊர்வசிமேனகைரம்பைதிலோர்த்தமை
உன்னதமாகவந்தார்.

அநுபல்லவி.

சீர்வளரருச்சுனன்செழுந்தவத்தைச் சோதிக்க
சிவனைவணக்கின்றசிந்தைதனைப் போதிக்கஊர்வசி

சரணங்கள்.

கானகந்தன்னிலிருந்திடுஞ் சேவு
கலாபமடமயிலனம் போல
வானகமின்னல்கள்மாநிலவந்த தென்ன
மாந்துளிரைநிகர்த்தவடிவுபளப ளென்ன (ஊர்வசி)

அன்னப்பேடைகள்போலருமையுட நடந்து
ஆரணியங்களுடனாறுமலை கடந்து
சின்னஞ்சிறியகொடிபோலுமடை நுடங்க
சிலைவிசையன்றவத்தைச்சிதைக்கும்படி துடங்க (ஊர்வசி)

பம்பரம்போலினம்பருதுமுலை குலுங்க
பாரத்தமுனிவர்நெஞ்சம்பதைத்துமிகக் கலங்க
அம்புவிமையேயாட்டி ஆசைவலையிற் பூட்டி
அருமைபதுடாராட்டி அனந்தவிச்சத்ரங் காட்டி (ஊர்வசி)

அர்ச்சுனன்தோத்திரம்-தரு-இ-ம்-பரசுதாளம்-திரிபுடை.

பல்லவி.

அரகரா-திரிபுர-ஹரா

அநுபல்லவி.

அரகராபார்வதி மனோகரா
அடியார்நினைந்ததையளிக்கும் சுபாகரா அரகர

சரணங்கள்.

ஆதியான கிரபாகரா-இரு
ளகலவந்த திவாகரா

சீதளசந்திர சேகரா உந்தன்
திருவருள்புரியந்திவ்ய சாகரா-அரகரா
சுருதிபுகழ்ந்திடும் தூயகா-சுடுஞ்
சுடலையிலெரியில்நடித்த நாயகா
சதுர்மறையவர் தாயகா-எந்தன்
சகலையறுசிவகலை நாயகா அரகரா
சாமகுணசா தாரணா சைவ
சாம்பிரதாயக வாரணா
நவரத்திய காரணா-நெஞ்சினில்
நினைக்குதவரந்தரும் பூரணா-அரகரா

நடனப்பெண்கள்சொல்-தரு-விருத்தம்.

எப்படியென்னசெய்வோமிவர் தபோபலனைப்பார்த்தால்
கைப்புகுநமது முன்குலமெனும்வலைகவசப்படுவதில்லை
தப்புமிவாகளெப்பான கடசிகளொன்றுமில்லை
இப்பொழுதனுப்பிவைத்த இந்திரனுக்கென்னசொல்வோம்

வசனம்.

கேளுங்கள்சகிமார்களே இந்த அர்ச்சுனனுடைய தபோபலனைப்பார்த்தால் நமதுடையமையலாகிய வலைக்குள்ளே வசப்படுகிறதுபோலில்லை நாமுன் அந்தரிஷிகள் செய்யப்பட்ட தவத்தைப்பார்த்திருக்கிறோம் இப்படிப்பட்ட தபத்தைப்பார்த்ததில்லை நம்மையனுப்பிவைத்த தேவேந்திரனுக்கு என்னசொல்லப்போகிறோம்பெண்களே.

நடனப்பெண்கள்-விருத்தம்.

கூந்தலைக்கலைப்போஞ்சொய்கையைத்திருப்போங்
கோதிலாஅருவியிற்குளிப்போம்
சாந்தமும்புனுகும் தனத்தின்மேலணிவோம்
தடமுந்சுனைமலர்களைப்புனைவோம்
பாரதமாயிசைகள்பாடுவோம்விழிடாற்
பட்சமேசொன்னன்றுடந்நடிப்போம்
சோர்ந்திடு மயிலம்போலாடுவோநாது
செய்கையைச்செய்துநாமறிவோம்

ஊர்வசிசொல்-வசனம்.

ஆனால்சிலகாரியஞ்செய்வோம் அது என்னவென்றால் இந்த அர்ச்சுனனுக்கெதிரேகாய்றின்வாடையிலே நின்றுகூந்தலை அவிழ்த்து

தறிமுடிப்போமா (மேனகைசொல்-வசனம்) ஆ-ஆ அதுவுமெய்தான் அந்தப்பரிமளவாடையினாலே அவர்சற்றேகண்ணைத்திறந்து பார்த்தாரேயாமானால் இந்தஸதனங்களைச் சற்றேமூடலாம் அதுவுமல்லாமல் இங்கே ஓடப்பட்டமலையருவிகளிலே நாம்ஜலக்கிரீடை பண்ணலாம (அரம்பைசொல்-வசனம்) அப்படியல்ல அவர்கண்ணைமாத திறந்திறப்பாரேயாமானால் திவ்வியமானசந்தனசஸ்தூரியை ஸதன்னியங்களில் பூசலாம, அதுவுமல்லாமல்சளகலென்றோடி மல்லிகை முல்லைபுஷ்பங்களைப்பறித்து முடிக்கலாம் தம்புருவீணைகளை யெடுத்துக்கொண்டு ஆனந்தமாய்ப்பாடலாம் அவர் காதிலேகேட்கும்படியாய்க் கிளிகள்போலும் நன்றாய்ப்பேசலாம் (திலோர்த்தமைசொல்-வசனம்) அதுமாத்திரமென்ன பந்தாடலாம் அம்மானையாடலாம் நமதுலேயானதெல்லாஞ்செய்துபார்ப்போம், (ஊர்வசிசொல்-வசனம்) அப்படியே செய்வோம்வாருங்கள்

பெண்கள் சொல். இ-ம் சங்கராபரணம்-தாளம் ஆதி

கண்ணிகள்.

வாரும்வாரும்பெண்களே எல்லோரும் விளையாடலாம்,
வாரும்வாருபெண்களே.

ஓடுமருவிநீரிற் — குளிப்போம் நாம்
ஒருமையாகச்சிரித்து — களிப்போம்

கூந்தல்விழித்துதறி — முடிப்போம் நன்றாய்
குலாவிகாமசங்கீதம் — படிப்போம்
சந்தனமுல்லைமேல்வாரிப் — பூவாமட நலல
சரசசல்லாபமாகப் — பேசுவோம்
பேடைமயில்கள்போ — லாடுவோம்-நாம்
பிரியமாகவேகூடி — யோடுவோம்

கொங்கைக்குடத்தைசற்றே — காட்டுவோம்-அவர்
கோதில்மனதிற்காம — மூட்டுவோன்

சேலைத்தனையவிழ்த்து — வுடுப்போம்-காமஞ்
செறிந்ததுபோற்சோர்ந்து — படுப்போம்

அன்னப்பேடைகள்போலே — நடப்போம்நமது
ஆடலொன்றொன்றுகட்டி — நொடிப்போம்

ஸ்ரீமகாபாரதவிலாசம்.

வினைகைக்கொண்டுசெற்றே மீட்டுவோம்காமம்
விளைக்குமானந்தசுகி கூட்டுவோம்
காணுமாபரணங்கள் பூணுவோர்நாது
கலையைநெகிழ்த்துக்கொஞ்சம் நாணுவோம வாரும்

ஊர்வசிசொல்-விருத்தம்.

மாதர்களாடலெல்லாம்வகைவகையேவேணுசெய்தும்
நீதிலாவிஜயன்கண்கள்திறந்துபாராமற்போனான்
ஆதலால்வனிதமாரே அங்கசன்றனையழைத்து
தாதுவிழ்வாளிதூற்றித்தவத்தினைக்கெடுக்கச்செய்வோம்

வசனம்.

கேளுங்தோழிமார்களே கேளிவிலாசமாய்நம்மாலேயான விசித்திரங்களெல்லாஞ்செய்தோம் அந்த அர்ச்சுனன் கண்ணைத் திறந்து பார்க்கவில்லை ஆகையால்மன்மதனையழைத்து புட்பபாணங்களைப் பிரயோகஞ்செய்யச்சொல்லு அர்ச்சுனன் மனதைச்சோதிக்கவேணும் (அப்படியேசெய்வோம்)

மன்மதன்வருகிற பொதுவிருத்தம்.

மையலைத்தருமின்னார்கள்மகபதிமொழிபாத்தங்கள்
கையினிளாணமட்டுங்காண்பித்துமருச்சுனன்றன்
மெய்யமனஞ்சிதைவுறாமல்விடையேருந்தவைநோக்கிப்
பையவேதுதிக்கவீரபராக்கிரமவேள்வந்தான்

பொது-வசனம்

அகோதெப்படியென்றால் நடனப்பெண்கள்சங்களுடைய ஆடல்பாடல்முதலிய அபிநயங்களைக்காட்டியும் அர்ச்சுனன் தன்கருத்து சிதையாமல்கடவுளைநோக்கி அதிகவுக்கிரமாகத்தவஞ்செய்யும்போது மன்மதன்வருகிறவிதங்காண்க.

மன்மதன் வருகிற-தரு-இ-ம்-சௌராஷ்டிரம் ஆதிதாளம்.

பல்லவி.

மன்மதராசன்வந்தான்- இதோநவமன்மதராசன்வந்தான்.

அநுபல்லவி.

வன்மைபெருவிஜயன்வனவலியைக் கெடுக்க
வாசமிகுந்தசெழுமலர்க்கணைத் தொடுக்க-மன்மத

சரணங்கள்

தென்றலின் தேரேறி மாதர்
செழும்படை தொண்டுமீறி

குன்றுவில்லாற்குமுன்னங்குதித்துச்சென்றதுபோல
குதித்தச்சிரத்தைகளித்துக்கொக்கடித்துமென்மேலே (மன்)

திங்கள்குடை பிடித்து நல்ல
செழுங்கடல்முரசடித்து
பங்கயகருப்புவில்லைப்பட்டணிநாணி யேற்றி
பார்த்தனைக்கண்டவுடன்பனைமலர்த்தனைத் தூற்றி (மன்)

தாழ்வுடவா விறுக்கி விசயனைச்
சுரதிகமீசைமுறுக்கி
ஏழுலகத்தனிலெனக்கெதிரில்லை யென்ன
இமையவரிவன்வல்லெளிதல்ல வென்றுபணன் (மன்)

ஸ்திரீகள்-மன்மதனுக்குச்சொல்-விருத்தம்.

மன்மதவேந்தேகேளாய்மகபதிசொன்னவண்ணம்
மென்மைசோவிசயன்முன்னேவிசித்திரமவேணசெய்தோம்
தன்மனஞ்சிவத்தயவிலலைந்தநெறிமலையவில்லை
வன்மைசேருனதுகையின்வவர்களைத்தொடுத்திட்டாயே.

வசனம்.

கேளாய்மன்மதராசேந்திரா தேவேந்திரன்சொன்னபடி சென்றுஎங்களாலானதந்திரங்களெல்லாஞ்செய்துபார்த்தோம் அந்தஆர்ச்சுனன்கண்ணைத்திறந்துபார்த்ததில்லை கருத்தஞ்சிதைந்ததில்லை இனிமேல் உம்முடைய புட்பபாணங்களைப் பிரயோகஞ்செய்யவேணுமையா

மன்மதன் நடனப்பெண்களுக்குச்சொல்-விருத்தம்-

திருவினிலிருந்தேவெங்குஞ்சிறப்புற்றபெண்களேநல்
லுருவினிலாபயிலானென்றுரைப்பதிருமருச்சுனன்பால்
ஒருநிமைப்பேற்சென்றயுறுதியாமவனறவத்தின்
பருவங்களறிந்தென்னைமுன்பாணத்தாற்சிதையச்செய்வேன்.

வசனம்.

ஆஆ பெண்களே அந்தஆர்ச்சுனன் அவ்வளவுபலவானானால் இதோநானேபோய்அவன்தவத்தையும அவனுடைய திறத்தையும் அறியத்தக்கதாகமலர்க்கணை தொடுக்கிறேன் பாருங்கள் பெண்களே

நடனப்பெண்கள்-மன்மதனுக்குச்சொல்-வசனம்.

அகத்தியம்எந்தவிதமாவதுசெய்யவேணுஞ்சுவாமி.

மன்மதன்புட்பபாணம்பிரயோகம்பண்ணுகிற தரு

இ-ம் உசேனி-தாளம் ஆதி.

பல்லவி.

தொடுக்கிறேன்பார் மலர்க்கணை
விடுக்கிறேன்பார்-அர்ச்சுனன்மேல் (தொ.டு)

அநுபல்லவி

அடற்புலிசிகரர்ச்சுனன்மேற கணை தொடு

சரணங்கள்

அவிழ்தப்புலனுங் குவிந்ததவமும்
கவிழ்கமனமுந் தவிழ்கசிந்தைய தொடு

மூட்டிநகணையும் பாட்டிருந்தியும்
கூட்டிநாவமும் பூட்டிநதுலைய தொடு

புநிநெறியுஞ் சிந்தைவலியும்
இநதநொடியில் முந்திச்சிந்தைய தொடு

அர்ச்சுனான்சொல்-தோத்திரம் தரு-இ-ம்-ஆகிரி தாளம்-ஆதி

பல்லவி

சம்போ சிவ-சம்போ

அநுபல்லவி

அம்பொற்ற இஅடியவர் நிதியே சம்போ

சரணங்கள்

கருதிவி லாச சோதிப்ரகாசா
தருவுமை நேசா சகலலோகேசா சம்

மதிநுதல் நேயா மறைசொல்சகாயா
நதியணி தாயா நடேசசிவராஜா சம்

தொழுகழு சீலா சூலகபாலா
மொழியணு கூலா மூலானுமூலா சம்

மன்மதன்-நடனப்பெண்களுக்குச்சொல்-விருத்தம்

மூநதுமூவுலகுதன்னில்மொழியுமென்கணையினாலே
சிந்தையுமழிலும் வேறுயச்சிந்தையாதபோகளிலலை
இந்தவிலவிசையன்சிந்தையினிசாறுஞ்சிந்தைவதில்லை
பைந்தொடிமாரேயிங்கேபகைகயென்னபோவோம்வாரீர்

வசனம்.

கேளும்தெய்வப்பெண்களே மூன்றுலோகத்திலேயுமென்னுடைய புட்பபாணத்துக்கு வசப்படாதபேர்களில்லை அந்த அர்ச்சுனனை மனதை பேதிக்க இனிவுங்களாலுமில்லை என்னாலுமில்லை தேவேந்திரனிடத்து க்குப்போவோம் வாரீர்பெண்களே,

நட். எப்பெண்கள் தேவேந்திரனுக்குச்சொல்-விருத்தம்.

வருமகபதியேபோற்றி வானவர்தலைவாபோற்றி
பரவிநீர்சொன்னவண்ணம் பார்த்தனுரிடத்திற்சென்று
அருமையாயனந்தங்கோடி யாடல்செய்துபார்த்தோம்
ஒருவராரில்லையந்த வுயர்தவஞ்சிதைக்கத்தானே

வசனம்.

கேளும்தேவேந்திரமகாராசனே தேவரீருத்தாரப்படிக்கு அர்ச்சுனனிடத்திற்குநாங்களபோய் எங்களாலானசாமர்த்தியங்களையெல்லாஞ் செய்துபார்த்தோம் அவருடையதவத்தைப் பேதிக்கிறதற்கு ஆராலுமாகாதுசுவாமி,

தேவேந்திரன்-நடனப்பெண்களுக்குச் சொல்விருத்தம்.

எங்கிலுஞ்சீர்த்திபெற்றும் இணையிலாததவஞ்செயவோர்பால
சங்கையில்லாமற்சென்றுந் தவத்தினைச்சிதைக்கவிமழுந்
கொங்கைபைந்திரந்துகாட்டுங் கொள்கையுண்டாயிதங்கீத
மங்கையரெனப்பேர்பெற்று மயக்காமல்வந்துவிட்டீரே.

ஆ ஆ நடனப்பெண்களே உங்களுக்குநிகரான பெண்கள் இல்லையென்று கீர்த்திப்பெற்றும் தபஞ்செய்வார்களிடத்தில் நாணமில்லாமற் சென்று அநேகவிதகோலாகலஞ்செய்து தவத்தைபழிக்கவிழியால் மயக்கவும் மொழியால்யழிக்கவும்வல்லமையிருந்தும் அந்தஅர்ச்சுனனைமயக்காமல் வந்துவிட்டீர்களே இதுதானு பெருமைபெண்களே.

தேவர்கள் தேவேந்திரனுக்குச்சொல் விருத்தம்.

முனிவனைமயக்குந் பல மொழிவிழியுஞ்சங்கீதத
கொனிதனிற்குயிலும்நாணக் சொ-
தனைவிடாசசமர்த்

சிபனையும் ஆடலின்மயில்பிரமிக்கவும் புணர்ச்சியில்காமம் பிந்திவிட சரத்தைப்பெற்ற இந்தமாதர்கள் வலையிலகப்படாமல் தன்கையிலிருக் குந் சிலையில் இவர்களைமயக்கி அனுப்பிவிட்டானே அவனல்லவோத போதீநீ தேவேந்திரமகாராசனே.

தேவேந்திரன்-தேவர்களுக்குச்சொல்-விருத்தம்.

ஆ ஆ நன்றாய்ச்சொன்னீர் நன்றாய்ச்சொன்னீர் தேவர்களே.

தேவர்கள் தேவேந்திரனுக்குச்சொல்-விருத்தம்.

மான்போல்விழிகண்டெனுமொழியும்
மதிநிரவதனமுமுற்நறும்பூச்
செண்டுபோல்முலையுந் தாளம்போறபல்லும்
திகழிடையுங்கையாம்வாழைத்
தண்டுபோற்றொடையுந்தங்குமாதவர்கள்
தவந்தனைச்சிதைத்திடவென்று
உண்டுபண்ணியபொற்பியறவுங்கலங்கா
மோசமாய்விட்டதுமிகவிநதே

வசனம்-

யா நந்தேவர்களாதிபதியான தேவேந்திரமகாராசனே இந்தஸ்திரீகளை மாதாவாகும் பிரமதேவன்பார்த்து கறுத்தவண்டைப்போல் சிறுத்தவி ழியும் மதுரம்பொருந்திய சருக்கரையைநிகர்த்த நல்லமொழியும் சந்திர னையொத்த முகமும், வாசனைபொருந்திய சாம்பவப்பந்து கட்டியுருட்டிய பூப்போலும்பாலஸ்தனமும், முல்லையொத்தபல்லும் உதிர்க்கையை போல் இடையும் மிதுர்வாகியவாழைத்தண்டுபோன்ற தொடையும் பிரமதேவப்படைத்தான் அதனையாதுக்கென்றால் மாதாவர்களுடை ய தவநிலையைகலைக்கும்படியாக அப்படியேசெய்துவந்தார்கள் இப்போ அர்ச்சுனனிடத்திற்கு இவர்களைபோனால் பாடல்முதலியஅபிநயங்களைக் காட்டி அநேகதந்திரங்களைச்செய்தும் இவர்கள் கைவசமாகாமல் தன் கைவசமாகச் செய்து இவர்களை அனுப்பிவிட்டது இப்பேர்ப்பட்டஸ்திரீகளை வசிபருநிறைபயிர்த்தக்க மாதவதனையுடையவனானதால் விசயனொன்றுபே ர்கொடுத்ததா யிருக்குமென்று நினைக்கிறேன் மகாராஜனே.

தேவேந்திரன்சொல்-வசனம்.

ஆ ஆ நல்லஉபாயமானயுத்திசொன்னீர்கள் தகும் தகும் நானும் அப்படியேநினைக்கிறேன்.

தேவர்கள்-தேவேந்திரனுக்குச்சொல்விருத்தம்

இந்தமின்னார்களுக்கு மிடங்கொடாதனுப்பிவிட்ட
விந்தையானதுஞ்சீரல்ல வில்லிலும்வெற்றிசேர்ந்த
கந்தர்ப்பன்விட்டவைந்து கணைக்குமஞ்சாமலோட்ட
தந்திரஞ்செய்தவந்த தனஞ்செயன்பெருமையாதோ

வசனம்.

கேளும்தேவேந்திரமகாராஜனே இந்தநடனமாதர்களை ஓடிவிட்டதும் பெரிதல்ல முன்புசாட்சாத்காரனை சிவகரனுடைய தவத்தையுஞ் சிதைக்கிறேனென்றெழுந்த தீரவீரபராக்கிரமமுள்ள மன்மதனவிட்ட ஐந்துகணைக்கும் அஞ்சாமல் பின்னிட்டோட அகோரமாகியதவஞ்செய்யப்பட்ட அர்ச்சுனனுடையபெருமையென்னமோ தெரியவில்லை தேவேந்திரமகாராஜனே

தேவேந்திரன் நடனப்பெண்களுக்குச்சொல்-கவி.

வானும்அவனிமுதலும் தானுங்குழல்மடவீர்
ஈனும்விசயனிடம் யானும்போய்வருவேன்

கேளும் தெய்வப்பெண்களே அந்தஅர்ச்சுனனிடத்திற்கு நானே போய் அவன்தவத்தை யறிந்துவருகிறேன் பாருங்கள்பெண்களே.

தேவேந்திரன் பிராமணனாகவருகிறபொழுது விருத்தம்

தெரிவையாராலுந்தீர்ந்த சித்தசனானுமந்த
அரியவர்ச்சுனன்தருந்தவத்தை அறிந்திடாமற்போனதாம்
பெருமைசேரிந்திராசன் பிராமணக்கிழவனாகி
மருவுபஞ்சாங்கங்கையில் வைத்திதோவருகின்றானே.

பொது-வசனம்.

அகோ தெய்வப்பெண்களே அர்ச்சுனனுடைய மனதைச்சோதிக்க தேவேந்திரன் கிழப்பிராமணனாகவருகிறவிதங்காண்க.

பிராமணன்-வருகிற-தரு இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்,

பல்லவி.

வேதியன்வந்தானே-கிழ-வேதியன்வந்தானே.

அநுபல்லவி.

மாதிமைதனில்வில்லுமைபடைத்த
ஆதரவாகிய அர்ச்சுனனருகே (வேதி)

சரணங்கள்.

நரைத்திரைதிகைந்தெங்கும் கோலூன்றி
நடந்துநிமிர்ந்தும்

இரைத்திடும்பெருமூச்செறியு முளப்போடு
எட்டியெட்டிநடந்திடு மிடுபுளப்போடு (வேதியன்)
குத்திருப்பலும்பேச்சுந் தள்ளாடிக்
கூப்பிநிங்கைவீச்சும்
தந்திபிடறித்தள்ளாடியடை யோடு
தழுவத்தழுவஇடைசரிந்திடுமுடை யோடு (வேதிய)
கண்கள்மிகவுங்குழிந்து மாதர்கள்
காமமுழுதுமொழிந்து
மண்ணாசையினிமறந்துவிட்டோ மென
மாதவஞ்செய்நுவழிப்படுவோ மென (வேதிய)

வேதியன்-அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்.

ஆரடாபிள்ளாய்நீதான் அரன்கைலாயந்தன்னில்
ஓரவேதணலைமூட்டி யொருகாலின்மீதுநின்று
நேருமுன்கருத்திலென்ன நினைந்துநீதவஞ்செய்கின்றாய்
சேருமுன்னெண்ணமில்லாஞ் சீக்கிரமுறைசெய்வாயே

வசனம்.

ஆரடாபிள்ளாய்நீ இந்தக்கைலாயமலையருகே பஞ்சாக்கினி மத்தியிலே ஒருகாலிலேநின்று தவஞ்செய்கிறாயே என்னவேண்டித்தவஞ்செய்கிறாய் சொல்லும்பிள்ளாய்,

அர்ச்சுனன்-வேதியனுக்குச்சொல்-விருத்தம்

வேதியர்க்கரசேநாலு வேதமந்திரத்தின்வித்தே
காதலாய்த்தவஞ்செய்கின்ற காரணமென்னவென்றீர்
ஆதியோடந்தமில்லா வரும்பரம்பொருளாய்நின்ற
மாதொருபாகனென்முன் வரவேண்டித்தவஞ்செய்கின்றேனையா

வசனம்.

கேளுமையா வேதியரே நான்காலகண்டத்திரிநேத்திர சடாமகுடதாரியான பரமசிவன் வரவேணுமென்று தவஞ்செய்கின்றேனையா

வேதியன்-அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்.

நாலுவேதங்களுக்கும் நற்றவமுனிவருக்கும்
சீலமாம்பிரமனுக்கும் தேவர்க்குமவர்க்குமெட்டா
நீலகண்டனைநீகாண நினைத்ததெந்தகைமையென்றால்
சாலிற்பெறும்போலேழு சமுத்திரங்கடப்பதாமே

வசனம்.

ஆரடாதம்பிதடா அந்தப்பரமேஸ்வரனைக்காண வேணுமென்று நான்கு வேதங்களுந் தேடிக்கொண்டிருக்கின்றது ரிஷிகளெல்லா

ம் அனந்தங்கோடியுகங்களாய் அந்தப்பரமசிவனைக் காணுதற்குத் தவ வஞ்செய்குறார்கள் தேவர்களும் அவரைக்காணும்படியாக இன்னமுந் தேடுகிறார்கள், அப்படியிருக்க-நீ அவரைக்காணவேணுமென்று தவஞ்செய்கிறது எப்படியிருக்கிறதென்றால், ஒருசிற்றெறும்பானது ஏழுகடலேயுந்தாண்டி அப்புறம்போகவேணுமென்று போனதுபோலிருக்கிறது அடபோடாபயித்தியக்காரா ஓடிப்போடாபோ.

அர்ச்சுனன்-வேதியனுக்குச்சொல்-விருத்தம்.

சருவசங்காரகாலம் தான்வந்துநெருங்கினாலும்
உருவுடற்சிதைந்திட்டாலு முயிர்விடுமளவுமந்தப்
பிறையணிசடையோனென்முன் பிரத்தியட்சமாய்வாராமல்
திறமுடன்செய்யாநின்ற செழுந்தவநான்விடேனே

வசனம்

கேளுமையா ஓய்பிராமணா, சர்வசங்காரகாலம்வந்தாலும் என்னுடையதேகஞ்சிதைந்துபோனாலும் பிராணபரியந்தம் அந்தபரமேசுரர் என்முன்பாகவராமல் நான்செய்யப்பட்ட அகோரமானதவத்தைவிடமாட்டேன் நீர்போம்வேதியரே.

வேதியன்-அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்

அத்தனையுறுதியுன்னி யமர்ந்திருந்தவனாயில்
வித்தகன்விடையிலேறும் விமலனுமுன்வந்து
பற்றிநீநினைத்தபாசு பதந்தனைத்தந்துமேலு
மற்றுநீகேட்கப்பட்ட வரத்தையுங்கொடுப்பார்மைந்தா

வசனம.

கேளும் என்குமாரனை அர்ச்சுனா நான்தேவேந்திரன் உன்மனதுசோதிக்கத்தக்கதாகப் பிராமணவேடங்கொண்டுவந்தேன் இப்போதுநீ சொன்னவுறுதி உன்னிடத்திலிருக்குமானால் அந்தபரமசிவனும் வருவார் நீநினைத்துவந்தபாசுபதத்தையும் கொடுப்பார் மேலும்உனக்கு வேண்டியவரங்களையுங் கொடுப்பார் உன்மனோயிஷ்டப்படிக்கு நடக்கும் சுகமாயிரு நான்போய்வருகிறேன அர்ச்சுனா,

அர்ச்சுனன்-வேதியனுக்குச்சொல்-வசனம்.

சரணஞ்சரணம் அப்படியேபோய்வாரும என்பிதாவே

அர்ச்சுனன்-தபசு-[illegible]-தரு-இ-ம்-உசேனி-மிசுரதாளம

பல்லவி,

சிவசங்கரமக
திகழுந்தனிதேசிக

தேவா
தேவா-சிவசங்கர

சரணங்கள்.

வரிவேல்விழிமாதுமை	பாகா
மதிசூடியகாரண	தேக-ஓ-சிவசங்கரா
சதுர்மறைநேதிய	பாதா
சகலாகமநாதிய	போதா-ஓ-சிவசங்கர
அதியாந்தமையாரூப	காரா
அலர்சூடியமாரசம்	மாரா-ஓ-சிவசங்கர

பொது-விருத்தம்.

மாயநிறைபோனபின்பு வையகவில்விஜயன்செய்யுந்
திகழ்தவப்பெருமை யாத்தன் சேடியராலேகேட்டு
ஆகமகிழ்ந்துமையாள் மிக்க வன்புகூர்ந்தருள்மிகுந்த
புகழ்பெருசிவனோர் இணையடி போற்றிவாசாற்றுவானே

பொதுவசனம்.

அதேசமயத்திலேயென்றால் தேவேந்திரமகாராசன் போனபின்பு அர்ச்சுனன்செய்யப்பட்ட அதிகானதவத்தை உமையவளுடைய பணிவிடைப்பெண்களானவர்கள் உமையவளுடனே சொல்ல அந்தஉமையவளும் தன்கணவனான மகாதேவருடனே சொல்லுகிறவிதங்காண்க.

பார்வதி-சிவனுக்குச்சொல்-விருத்தம்

நாதனேயொன்றுகேளாய் நமதுகைலாயந்தன்னில்
எந்நாளுமின்றுமில்லா யாவனோஒருவன்வந்து
தீதிலாத்தவஞ்செய்கின்றான் தெரிந்துநானுன்னைச்சொல்வேன்
ஆதலாலவன்கிட்டப்போய் நீதானுந்தோன்றிச்செய்குவாயே.

வசனம்.

கேளும் என்பிராணநாயகரே நம்முடைய திருக்கைலாயமலையிலே ஒருபரதேசி மகாகடினமான தபசுசெய்கிறான், அப்படிப்பட்ட தபசு இதுவரையிலே ஒருவருஞ்செய்ததில்லை ஆகையால் அவன்கேட்ட வரத்தைக்கொடுத்து ரக்ஷிக்கிறதாய்க்கொடுக்கவேணுஞ்சுவாமி.

சிவன் பார்வதிக்குச்சொல்-கொச்சகம்,

சோமனுங்குளிர்வதனத் தேனையேசுற்றமனுக்கும்
வீமனுக்குநேரினியே மேவுமுந்தனைத்தனையென்று
சேமவனகாங்க செங்கண்மாலுக்குரியோன்
தாமனிமாப்பன் தவஞ்செய்கிறான் பெண்மயிலே

வசனம்.

கேளாய்பார்வதி இங்கேதபஞ்செய்யப்பட்டவன் ஆரென்றால் பண்டுபுத்திரரான தருமனுக்கும்வீமனுக்கும் பிறகிளையோன் மேலும் உன்தமயனான மகாவிஷ்ணுவுக்கு உயிருக்குயிரானவன் அவன்பேர் அர்ச்சுனன் அவன்தான் இப்படித்தவஞ்செய்கிறான்பெண்ணே,

பார்வதி-சிவனுக்குச்சொல்-கொச்சகம்.

தேடரியஞானச் சிவக்கொழுந்தேதீரசேவீர்
வாடவருவானவருநற்றவருமற்றவருங்
கூடப்பிறந்தவரைக் குந்தியைவிட்டவ்விசையன்
நீடுதவஞ்செய்ய நினைந்ததென்னசொல்வீரே

வசனம்.

தேவாதிதேவர்களுந் தேடரும்பரிபூரணமானதேவா அந்த அர்ச்சுனன்கூடப்பிறந்தவரையும் தாயாகியகுந்தி தேவியையும் விட்டுப்பிரிந்து இங்கேவந்துதபஞ் செய்யவேண்டிய காரணமென்ன தெரியச்சொல்லவேணுஞ்சுவாமி,

சிவன் பார்வதிக்குச்சொல்-விருத்தம்.

வஞ்சன்திருதராட்டிரன் மகன்செய்யும்வினையத்தாலே
சஞ்சலச்சூதமாடி தமக்குள்ளசெல்லாந்தோற்று
பஞ்சமாய்வனத்திற்சார்ந்தார் பகைவனையிகழ்ந்துவெல்ல
மிஞ்சியேயென்கைபாசுபதாஸ்திரம்வேண்டிவந்தான்

வசனம்.

கேளாய்பார்வதி உலகத்திலே திருதராட்டிரன் பிள்ளையாகிய துரியோதனாதிகள் கபடவஞ்சகத்தினாலே சூதாடி தங்களுக்குள்ள சகலமுந்தோற்று பன்னிரண்டுவருஷம் வனவாசமும் ஒருவருஷமும் அக்கியாதவாசமுஞ் செய்யும்படியாய்க்காட்டுக்கு வந்துவிட்டார்கள் ஆகையினால் அந்தசத்துராதிகளைச் செயம்பண்ண என்கையிலிருக்கும் பாசுபதாஸ்திரம் வாங்க இப்படிப்பட்ட தவஞ்செய்கிறான்பெண்ணே.

பார்வதி-சிவனுக்குச்சொல்விருத்தம்.

ஆகையினாலேயந்த வர்ச்சுனன்செய்தவத்தை
ஏகமாம்மனதிலெண்ணி யின்னமுஞ்சோதிக்காதே
வேகமாய்ச்சென்றுகண்டு வேண்டியவரமுமதந்து
பாகமாய்நினைந்தபாசுபதாஸ்திரங்கொடுத்திடாயே

வசனம்.

கேளும்என்பிராணரட்சகரான மகாதேவரே அந்தஅர்ச்சுனன்செய்யப்பட்ட தவத்தைஇன்னமுந் சோதனைசெல்லாமல் சீக்கிரமாகப்போய் அவனுக்குவேண்டியவரமும் கொடுத்துபாசுபதாஸ்திரங் கொடுத்துவாரும்சுவாமி.

சிவன்-பார்வதிக்குச்சொல்-விருத்தம்.

பதியிழந்துபோனவரைக் கொல்வதாகப்
படுதுரியன்மூகராட்சதனைவிட்டான்
மதிபுமவனபன்றியுரு வெடுத்தேயிந்த
மலைக்குவந்தானர்ச்சுனனைமாய்ப்பதாக
முதிருமுன்னே தாம்வேட வடிவம்கொண்டு
மூகராட்சதனுயிரை முடிக்கவேணும்
எதிர்விஜயன்கேட்டவரங் கொடுக்கவேணும்
மெழுந்திராய்பெண்மயிலே யெழுந்திராயே

வசனம்.

பாண்டவர் சகலமுமிழந்து காட்டிற்குப்போனபிறகு அவர்களைக் கொல்லும்படியாய துரியோதனன் மூகனென்னப்பட்ட ராட்சதனை அனுப்பினவைகதான் அவன் அர்ச்சுனன் தவசுக்குப்போன சேதிகேட்டு ஒருபன்றியுருவெடுத்து இந்தஅர்ச்சுனனைக் கொல்லுகிறதற்கு இந்தமலையில்வந்து பதுங்கியிருக்கிறான் ஆகையினால் நாம்வேடவடிவங்கொண்டுபோய்வந்த அந்தமூகராட்சதனைக்கொன்று அர்ச்சுனன் கேட்டவரங்களெல்லாம் கொடுக்கவேணும் சீக்கிரமாயெழுந்திரும்பெண்ணே.

பொது-அகவல்-இராகம்-எதுகுலகாம்போதி.

நாகணேசன் நந்தியைப்பார்த்து
காதல்சேர்நமது கணங்களெல்லாரும்
வேடராய்க்கையில் வில்லம்புகொண்டு
கூடவேவருகக் கூறெனவிசித்தார
அப்பழுக்கானே அறிவுள்ளநந்தி
செப்புமாயுரை சிவகணங்களை
அப்படியழைத்து ஆண்டவன்கருத்தைத்
தெப்படியுரைக்கச் சிவகணமெல்லாம
...க்கியபாக வெழுந்துகூச்சா...
மிக்ககோர்வேட ...

பிரியமாயிருந்த பெண்கணமெல்லாம்
உரியவேடச்சி யுருவமேகொண்டார்
சங்கரசம்பு சதாசிவமூர்த்தி
பொங்கமாய்த்தானும் புலித்தோலுடுத்தி
தருமயிர்பீலி தலையினிற்கட்டி
திகழ்கொன்றைமலரைச் செவியினிலணிந்து
பலநரைக்கோர்வை பண்புடனெடுத்து
நிலவியகழுத்தில் நிறையவேயணிந்து
கையில்வில்லம்பும் காலினிற்செருப்பு
மெய்யுடன்பூண்டு வேடுவனானார்
தோகைபார்வதியுஞ் சொருகுகொண்டையுமாய்
வாகைசேர்குண்டு மணிவடம்பூண்டு
புலிநகவளையல் பொருத்தவேபோட்டு
அலறித்தழையா லாடையுமுடுத்தி
கந்தவேள்குழந்தையைக் கக்கத்திலிடுக்கி
விந்தையாய்த்தெய்வ வேடச்சியானாள்
வேதங்களெல்லாம் வீறுநாய்களுமாய்
போதவேசூழ்ந்து புடையினில்வரவும்
ஓகையாய்முக னுறைவிடந்தேடி
வேகமாய்தெய்வ வேடவர்வந்தாரே.

வேடவர்வருகிற-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி.

வேடர்நாங்களே — தெய்வப்பதி
வேடர்நாங்களே

அநுபல்லவி.

நீடும்புகழ்கயிலாய-மலைமீதில் வளர் வெகுதூய
சிவநேய-நல்லுபாயமான்
நீதந்தனிலேஞான-யோகந்தனிலேகெட்டி (வேட.)

சரணங்கள்.

முதலாவது வேடன்-சொல்லல்

காடும்புலவரைக் கண்டு-மிக
காவுமனமுமவ றண்டு
நாணித்தலைபூணிக கொண்டு-ஓ-ஓ
நாடெல்செய்வதென விண்டுஉண்
ஞானேந்திரியங் நிதே-அதை

நாமழிக்கக்கூ
நடைவிண்டு-கிலிகொண்டு-மிக்க
நஷ்டப்படு மசடரை கூட்டும்
துஷ்டக்கசடரைவாட்டும்

டாதே-என
(வேடர்)

௨-வது-வேடன்-சொல்லல்.

பல்லைத்திறந்து
பசைத்தபேயையு
பத்தரிடத்திற்சஞ்
பத்துத்தலையு
வெல்லும்யானை
மேலுக்ததரீகமாய்த்
யைவிரிப்போம
விமலத்தொழிலது
சமரத்திடையினு

சிரிப்போம்-எம்மைப்
பெரிப்போம்
சரிப்போம்ராவணன்
நெரிப்போம்
யுரிப்போம்-அதை
தரிப்போம்
மனங்கரிப்போம்-நல்ல
செய்வோம்
முய்வோம் (வேடர்)

௩-வது-வேடன்-சொல்லல்.

திரைகடலெங்கு
திரவியங்களைத்
சிலவாய்ப்போமென
செப்புக்குடத்தினில்
உரமாய்த்தரையிற்
முண்ணுமலாவியை
சுத்திசொசரை
சிக்கதனிலே
முக்கிக்கொள்ளும்படி

மோடி-வெகு
தேடி
நாடி-அதைச்
மூடி
புதைத்து-தானு
வதைததுக்கொள்ளுஞ்
லுத்தப்பசாசரை
யிருக்கும்
யுறுக்கும்-(வேடர்)

௪-வது-வேடன்-சொல்லல்.

ஆளுக்கொருநொடி
யானைக்குச்சற்றேபற்
யானுற்கைமேற்கை
தாகுமானுற்சும்மா
வேளைக்குவேட்டையொன்
வேடிக்கையாய்வில்லம்
வீரத்தையுஞ்செய
விதியிவனென்ன
சதுர்முகனின்னங்

நொடிப்போம்-மத
கடிப்போம்-புலி
யடிப்போம்-மற்ற
யிடிப்போம்
றடுப்போம்-நிதம்
பெடுப்போம்-எங்கள்
சூரத்தையுஞ்சொல்ல
நீடுஞ்
தேடும் (வேடர்)

ரு-வது-வேடன்-சொல்லல்.

புலிக்கொடி யுள்ளவீரர்-அக்கினிப்
புரவியேறிய சூரர்
புகழ்பண்ணூட்டுள்ள தீரர்-முத்தமிழ்
புலவர்க்கருளு தாரர்
சிலையெழுபது முடைத்தோர்இந்தச்
சென்னையிர்கீர்த்தி படைத்தோர்
சிரேஷ்டமாமுத்தியாலுப் பேட்டையில்வாழ்கின்ற
சின்னமில்லாதவர் புகழ்புறும்
வன்னியமரபோர்கள் மகிழ்வுறும் (வேடர்)

சு-வது-வேடன்-சொல்லல்.

அவனியேயொரு மலையாய்-இந்த
அண்டச்சுவரொரு வலையாய்
அறிவிலார்மிக்க நிலையாய்-அங்கே
அதற்லுங்களே துலையாய்
தவறில்லாமலே மலக்கி-பொல்லாச்
சன்னக்கடலிற் கலக்கி-ஞருந்
தந்திதோங்தேயன்பு பற்றிவந்தேபின்பு
தற்பதத்தைத் தருந்
சொற்பதத்தைச் பொறும் (வேடர்)

எ-வது-வேடன்-சொல்லல்.

சிந்தையில்நன்னெறி பூரி-விந்வச்
செனங்களுக்கன்பு கூறி-பல
செந்தமிழ் நால் கவி லேறி-இந்தச்
செகமுள்ளளவும் வீறி
புத்தியில்வல்லோரை நாடிசிலர்
போற்றும்பிரபந்தங்ள் பாடி-மற்றத்
தொந்தமாயைலுத்தப்பசா சரைத்
தூக்கிப்போட்டுத் தாளைத்
தாக்கிவாட்டுங் காளை (வேடர்)

வேடர்-வேட்டையாடுகிற-தரு-இ-ம்

புன்னாகவாளி-தாளம்-ஆதி.

பல்லவி.

வலையைக்காட்டடா ஐயே ஐயே யிருப்பு
வலையைக்காட்டடா ஐயே

அநுபல்லவி.

நிலைபாய்மிருந்த ஊரெல்லாம்
நெருங்கிவரும் படியாய்
நின்றிவ்வன முற்றிலும்
சென்றுவருவேன் சுற்றிலும் (வலையை)

சரணங்கள்.

சிங்கமொன்றதோ ஓடுது பாருங்களதைச்
சின்னக்குட்டிகள் தேடுது
சங்கையில்லாமல்யானைத்தளங்கள்கும்புகும்பாகக்
கத்திவரும்பரி கூர்ந்து
சித்தைசெய்வோஞ் சேர்ந்து (வலையை)
வேசமாய்ப்புலிகள் மேயுது விளையாட்டல்ல
வேகரடிகளுந் சாயுது
போகவொட்டாமல்நாய்கள்பூட்டைத்தரித்தசட்டிப்
போனில்மடங்கினறு கொல்வோம்
வானுலகளவுஞ் சொல்வோம் (வலையை)
முள்ளம்பன்றிகள் துள்ளவேவுட்காரும்மரும்
முடிக்காய்நல்லலைக் குள்ளவே
கள்ளமாகபிடித்துச்சறிசமைத் துண்ணவேணும்
கங்குலைவந்துப்பாரும் தேடி
இங்குவந்துசேரும் கூடி (வலையை)
கலைமான்கள்செடி யோரம்-பெண்மானைக்கூடிக்
கங்லநுதேகாம விகாரம்
மலையைபொருந்த அண்மேணவாடாயிந்தப் புறத்தில்
வையமகிழ்ந்திடச் செய்யும்
கையம்பெருத்திட பொய்யும் (வலையை)
ஓயில்மயல் கூப்பிட்டதைப்-பிடிக்கவலை
புட்புகுந்தகா கேட்டதை
மயில்களாடிவரவேவதை செப்புந்சித்ராங்குள்ளா
வன்னவன்னமாகக் கூவிந்
சின்னமோமுன்ன மேவி (வலையை)
காடையுந் கவுதாரிநிரைநிரைந்துக்
காட்டைசுற்றி வைசாரி

சாடைபண்ணுங்கடம்பா	தனியேனகத்துடும்பா
தண்ணிரவணி	ஊறுது
கண்ணிக்குட்புரு	யேறுது (வலையை)
வாகுசேர்வானம்	பாடி-புள்ளினமுதல்
வருகுதேவலையைத்	தேடி
ஏகமாய்பக்கினங்கள்	எழுந்துபராதிடாமல்
இறுக்கியோராற்	புறத்தினும்
சுருக்கிவாமேற்	புறத்தினும் (வலையை)

வேடர்கள்-சொல்-விருத்தம்,

கானகக்கடம்பாகள்ளா கடுஞ்சித்திரக்குள்ளாகள்ளா
ஏனகத்துடும்பாவாடா யிங்குநாம்பிடிதசித்ர
வானகம்பாடியின்னம் வந்தபுள்ளினங்களெல்லாம்
தானகம்போய்விடாமல் ரனித்தனிபிடித்திடேரே-

வசனம்.

இதிராங் அண்ணேகானகக்கடம்பாங் சித்ரகுள்ளாங்கள்ளாங்ஏகத்துடும்பாங்இதிராங் நாமபிடித்தபட்சிகளெல்லாம் வலையைவிட்டுடிப்போகாமல்இறுக்கிஅதைச்சீராய்ப்பிடித்திடுவோம்வாங்களடாங்.

மற்றொருவேடன் சொல்-விருத்தம்

பிடிப்பதற்குள்ளேயுந்தன் பேச்சுங்கைவீச்சும்பார்த்தால்
அடிப்பதாய்த்தோற்றுதெந்தன் அண்ணேகேள்வல்லிடும்பா
நொடிப்பதாம்பக்கினங்கள் நொருங்கவேகட்டித்தின்னுக்
கடிப்பதற்கெந்தன்பல்நாவ் களிக்குதபாராயண்ணே.

வசனம்.

இதிராங்அண்ணேவல்லிடும்பாங் நாம்பிடிப்பதற்குள்ளாக உன்னுடையபேச்சையும் கையின்வீச்சையும்பார்த்தால் அடிப்பாய்போலங்காறுது, என்னடாங்இதிராங்அண்ணே நொடிப்போதிலே இந்தப்பட்சிகளைச் சுட்டுத்தின்னுக் கடிப்பதற்கு என்னுடையபல்லும் நாவும்ஊறுடாங்அண்ணேங்.

மற்றொருவேடன்-சொல்-விருத்தம்

எத்திசேதொத்திவில்லை யெத்தாக்காம்பிடிக்கும்
முத்திரிச்சங்அண்ணேகோளாய் முறிக்குதிரியலைனத்தைக்
கத்திடுங்காடைபோடும் கவுதாரிசாட்டுமாடச்
சித்திரப்புருவைத்தின்னச் சிந்தைமுந்தளிக்குதண்ணே

வசனம்,

இதிராங் அண்ணே முத்திரிச்சங்-நம்முடையவலையிலகப்பட்ட மு யல் பன்றிகாடைகௌதாரிமாட்டுப்புறு இதுகளையெல்லாங்கொன்று தின் னுகிறதற்குமெத்தவும் ஆசையாயிருக்குதடாங் வில்லில் திறமுடைய அண்ணேங்.

மற்றொருவேடன்சொல்-விருத்தம்.

வலையினிற்கட்டுண்டோங்கும் வன்னவிச்சித்திரமானின்
தலையினைத்தூக்கிக்கொம்பாற்றள்ளுதலாற்கடம்பைப்
பலனதுகாட்டாமானைப் பாயுகின்றதனால்நீண்ட
மலைதனைப்பிடுங்கிவாராய் வாரியேகொல்லுவேனே.

வசனம்.

இதிராங் தம்பி, துத்திரிச்சங்-நம்முடைய வலையிலகப்பட்ட அழகு ள்ள மான்கள் கொம்பினால் குற்றித் தள்ளுகிறதினால் கடம்பைகள் அத னைப்பாயுது-ஆனையினால் இதிராங் அண்ணே மலைபிடுங்கிஇதுகளைக் கையினால் தூக்கிஆகாயத்திலெறிந்து கொல்லுகிறேன் பாரடாயண் ணே.

பொது-விருத்தம்.

வந்திடும்வேடாவெள்ளி மலையெலாந்திரிந்துசுற்றி
அந்தமாம்வேட்டையாடி அடைவுடன்வருகும்போது
தந்திரக்கொடியமூகத் தானவனென்னும்பன்றி
விந்தையாய்யோடக்கண்டு வேடுவர்துரத்திட்டாரே.

கட்டியன்-வசனம்.

அகோதெப்படியென்றால் வேடர்கள்வெள்ளிமலைமுழுதும் வேட் டையாடிவரும்போது மூகராட்சதனென்னும் பன்றியைக்கண்டுவேடர் கள் துரத்திவருகிறவிதங்காண்க.

சுவாமிவேடன்-வேடர்களுக்குச்சொல்-விருத்தம்.

சானகந்தனிற்றிரிந்துகடும்வேட்டையாடிநீங்கள்
மேனியுங்கறுத்துமெத்த விடாய்கொண்டீர்போதும்போதும்
வானமும்புவியுந்தூர்கள் மருவிடவேயோர்பன்றித்
தானமேபோகுதந்தைத் தனுசினாற்கொல்வேன்பாரீர்

வசனம்.

கேளுங்கள்வேடர்களே நீங்கள்இந்தவனமுழுதுந்திரிந்துவேட்டை யாடிமிகவுங்களைத்துவந்தீர்கள் இதோவானமும்பூமியுஞ்செந்தூளாகப் பறக்கதக்கதாக ஒருபன்றியானதுபோகுது அதையென்கைபாணத்தி னாய்துவருகிறேன்பாருங்கள் வேடர்களே.

வேடர்-ஓரடி-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

பன்றியிதோபோகுதையே ஒரு
பன்றியிதோபோகுதையே

அநுபல்லவி.

பன்றியிதோபோகுதையே-பதுங்கிப்பதுங்கிமெய்யே பன்றி

சரணங்கள்.

பொக்கென்றெழுந்துபாய்ந்து பாய்ந்துசெடிப்
புறத்திலொதுங்கிச்சாய்ந்து
அக்கினிபோல சாய்ந்து ஓடும்
அருவிதனிலே.தோய்ந்து
செக்கச்சிவந்தகண்கள் செழுந்தணற்போலுருட்டி
திக்குத்திசைநடுங்க தேவரையும்வெருட்டி
பக்கபாரிசங்கூட்டி பார்க்கொம்புகள் தீட்டி
படுத்துக்கொண்டாப்போல்நீட்டி
பதுங்கியேமாப்புக காட்டி பன்றியிதோ

பொது-விருத்தம்.

பன்றியைக்கண்டுபார்த்தன்பகர்தவமழிக்குமென்றே
வென்றியோர்கணையைவாங்கியின்முகம்பிளக்கவெய்தான்
துன்றியகருணையால்முன்னந்தொடர்ந்திடும்வேடர்நாதன்
ஒன்றியோர்கணையாற்பன்றியுடர்பிளந்திடவெய்தானே

கட்டியன்வசனம்.

அகோதெப்படியென்றால் இப்படியாகவந்த பன்றியை அர்ச்சுனன் கண்டுதவத்துக்குவிக்கினம்வருமென்று ஒருகணையால்பன்றியின்முகம் பிளக்கவிட்டான் பிறகுவேடர்களுக்குத்தலைவனானசுவாமிவேடன்ஒருக ணையினால் அந்தப்பன்றியின்உடல்கிழியும்படியாய்ச்செய்து அர்ச்சுனனை க்கண்டு சொல்லுகிறவிதங்காண்க.

சுவாமிவேடன்-அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்

என்கணைமுன்னேபன்றியெழில்முகம்பிளக்கண்டு
பின்கணையதன்மேலிட்டுபிளந்ததைபிளக்கச்செய்தாய்
உன்னைக்குறிப்புமுந்தனுணர்வையுமெண்ணிப்பார்த்தாற்
பின்கணைபேதையித்தைப்பெண்களும்செய்திடாரே

வசனம்.

ஆரடா முகத்திலேமீசையும் கையிலே வில்லும்படைத்த பயலே உன்னைப்போலுஞ் சுத்தவீரனுண்டா என்கணையினாலே அந்தப்பன்றி

யினுடைய முகத்தைப் பிளந்தால் பின்னால் நீகணை தொடுத்துப் பிளந்த தைப் பிளக்கலாமா உன்னுடையவீரத்தையும் வில்லாண்மையும் உன் னுடைய புத்தியும் பார்த்தால் பெண்ணாகப் பிறந்தவர்களிடத்திலும்மி ராது, ஆ-ஆ.

அருச்சுனன்-வேடனுக்குச்சொல்-விருத்தம்

தவஞ்செய்புமென்கணைக்குச்சரகுண்டுசெலமுமுண்டு
அவஞ்செய்புமகங்காரமானையார்கொண்டுபோங்கள
நிவஞ்சொல்பிசகமாயுக்கன்னெறிப்பொலாங்கீட்டவேண்டாம்
பவஞ்சையென்னம்பாற்காற்றிற்பஞ்சுபஞ்சாக்கப்போறேன்

வசனம்.

ஆடா வேடப்பயலே மிருகங்களைக்கொன்று பிடுங்கித்தின்பது உங்களுக்குகுலவாச்சாரதர்ம அதுஉங்களுக்குத்தேவையானால்எடுத்துக் கொண்டுபோங்கள் அதிகமாய்க் கொவித்துப்பேசினால் சின்னபின்ன மாய்ச்சிந்திசிந்தாய் சில்லுசில்லாய் சக்கைசக்கையாய்ப் பெருங்காற்றி னால் இலவம்பஞ்சாக அடிக்கப்போகிறேன் ஓடிப்போடாவேடா.

வேடன் அருச்சுனனுக்குச்சொல்விருத்தம்

பயப்பட்டுவந்தபன்றிவந்துன்னைக்கொல்லுமென்று
பயப்பட்டேனம்பொடம்புபாய்ந்திடச்செய்தநீயா
செயப்பட்டபெங்கள்தன்னைச்சிறந்தபஞ்சாக்கப்போறாய்
இயப்பட்டவுந்தன்றிராணியிதனிலேதெரிந்துபோச்சே

வசனம.

ஒருபன்றியானது கொல்லுமென்று பயந்த என்கணையினாலே வி ப்புண்டுவந்தபன்றியின்மேல் அம்புதொடுத்த நீதானா இந்தப்புவனமெல் லாஞ்செயம்பெற்றஎங்களைப் பஞ்சாக்கப்போகிறாய் உன்னுடைய வி வேகமும் வில்லாண்மையும் உன்பவிசும் இதினால்தெரிந்தது, ஆ, ஆ,

அர்ச்சுனன் வேடனுக்குச்சொல்விருத்தம்

தாவியகணையைமூட்டிடத்தவஞ்செய்யுமிடத்தில்வந்து
மேவியேயின்னமின்னமேல்விழுந்துரைத்தாயானால்
தாவியகணைபாலுன்னைத்துடிக்கவோர்நொடிக்குள்ளாக
ஆவியைவாங்குவேனான் ஆமென்றானர்ச்சுனன்காண்

வசனம்-

ஆடா அடாவேடா நான் இந்தப்பஞ்சாக்கினிமத்தியில்நின்றுதவ ஞ்செயபுமிடத்தில்வந்து பிதற்றுகிறபடியினாலே பொறுத்தேன்.

இல்லாவிட்டால் என்னுடைய ஒரேபாணத்தினால் உன்னுடையபிராணனைவாங்கிக்கொள்ளுவேன் என்பேரோ அர்ச்சுனனடாவேடா.

வேடன்-அர்ச்சுனக்குச்சொல்விருத்தம்.

முன்னமென்குலத்துவேடன் முனைமுகவில்லுக்கஞ்சி
புன்றொருபாற்பான்சொல்லாத் பெறுவிரலறுத்துவிட்டாய்
அன்னவர்ச்சுனனீதானா அவனானீயடாயானால்
என்னிடபகைவனாச்சே யினியுன்னைநான்விடேனே

வசனம

அடா அர்ச்சுனா என்னுடைய குலத்திலே ஒருவேடன் வில்லாண்மைக்கஞ்சி ஒருபிராமணன் சொல்லைக்கேட்டு அந்த வேடனுடைய பெருவிரலை அறுததாப் ஆகையால் எனக்கு நீ சத்துரு உன்னையான் கொஞ்சத்திலே விடுவேனென்று யிருக்கிறாய்-ஆ-ஆ-ஆகட்டும்.

அர்ச்சுனன் வேடனுக்குச்சொல்-விருத்தம்.

ஒருதரம்பொறுத்தேன்பின்னுமொருதரஞ்சொன்னேன்மேலும்
பொருவாவுனக்கிப்போதுபொல்லாதகாலமேதோ
வெருவிபகிராதனுக்கும்வில்லுக்குமிகவுந்தூரம்
ஒருமியவேடாசும்மாவுயிருடனோடிப்போடா,

வசனம்

கூடாகேளடாவேடா ஒருதரம்பொறுத்தேன் ஒருதரஞ்சொன்னேன் அதையுமெண்ணாமற்பேசுகிறாய் உனக்கு இப்போது ஏதோ பொல்லாத காலம் போறமுன்னுது வனத்திலே சஞ்சரிக்கப்பட்ட வேடனுக்கும் வில்வித்தைக்கும் ஆண்மைக்கு வெகுதூரம் ஆனபடியினாலே உயிருடனே தப்பிஓடிப்போடா,

வேடன்-அர்ச்சுனனுக்குச் சொல் விருத்தம்.

வல்லிலேபோர்க்களத்திலேபின்வாங்கா
மனத்திலேதனுர்வேதவரம்புகப்பா
வில்லிலேயங்ஙங்கேவிஜயங்கொண்டு
விசையனென்றுபேர்படைத்தவிழலாபோடா
சொல்லிலேகைச்சண்டைதனிலெய்யம்பு
தொடுப்பதிலேமல்லுயுத்திபத்தொடர்பிலேமேல்
பல்லமரிலுன்சமர்த்துமென்சமர்த்தும்
படிப்படியாயெதிர்த்தொருகைபார்ப்போம்வாடா

வசனம்

கேளடா அடா அர்ச்சுனா, மல்லுயுத்தபத்திலே, சண்டைமுகத்திலே, பின்னுக்கிடையாத மனதிலே, தனுர்சாஸ்திரத்திலே, குறித்தப்

ாதவில் வித்தையிலே, அங்கங்கே விசயங்கொண்ட விசயன் நீதானு அடாபோடா விழலா, ஆகிலும் சண்டையிலும் பாணப்பிரயோகத்திலு ம் மல்லுயுத்தத்திலும் உன்னுடைய சமர்த்தையு என்னுடைய இராணி யையும் இருவரும் எதிர்த்து ஒருகைபார்ப்போம்வாடா.

ஆர்ச்சுனனுக்கும்-வேடனுக்கும் வாது-கண்ணகள்

இராகம்-பியாகடை-அடதாளம்.

ஆர்ச்சுனன்சொல் கண்ணி,

பார்ப்பதென்னடாயெந்தன் றிராணி
பார்க்கவுன்னலாமோ ஒருரு
பாணம்விடுகிறேனிதோ-அந்தப்
பாரடாஅட வேடா

வேடன்சொல்-கண்ணி

விட்டகணையைவிலக்கியிரண்டு
மேல்விட்டேனிதோபாரடா உன்
விசிங்தமோராகதிரண்டதோரு
மிகத்துளைத்தது போடா

ஆர்ச்சுனன்சொல் கண்ணி.

துளைக்குமுன்னமேமூன்றுகணைகள்
தொடுத்தேனிதோபாரடா தலையில்
தொடுத்தடியை மடித்ததோர்கலேந்
துணிகிறேனடா வேடா

வேடன்சொல் கண்ணி,

துணிக்கவிடுத்தமூன்றுகளையுந்
துண்டுதுண்டாயவிழ எதிர்
சுருககாய்மூன்றுகணைகள்விடுக்தேன்
தோற்றப்பயலே போடா

ஆர்ச்சுனன்சொல் கண்ணி,

தோர்ப்பதேதுமேலுமோகணையைத்
தொடுத்தேன்தொடுத்தேன்வேடா தலையில்
துலங்குமுடியுமிலங்குமணியுந்
துணிந்துபோச்சுதே வேடா

வேடன்சொல் கண்ணி

போச்சுதென்மூடி விட்டிவிடுவேனுசும்மாய்
பூச்சிகாட்டுரா யென்னடா

பூ-டுகிறேனுனைவாட்டுகிறேனென்
புஜபலத்தை யறியடா

அர்ச்சுனன்சொல் கண்ணி,

பெலமென்னவுந்தன்குலமென்னசும்மாய்
பேசுகிறாயடாவேடா வில்லைப்
பிடிக்கிறேனிதோஅடிக்கிறேன்தப்பிப்
பிழைத்துப்போடா வேடா

வேடன்-அர்ச்சுனனுக்குச்சொல் விருத்தம்

கல்லானேயுருட்டிவிட்டதெனத்திரண்ட தோள்வலியால் கையிலேந்தும், வில்லாலேயென்னைய டித்தாய் விடுவேனோ யித்துடனேமேலுமுன்னையல்லாமல் நீநானு நேர்ந்து கெட்டபோடு தோர்ப்பு மறியவேணும் வல்லாண்மை யுனக்கிருந்தால் மல்லுயுத்தஞ் செய்திடுவோம வாடா மூடா.

வசனம்

கேளடா அடா அர்ச்சுனா கருங்கல்லுருண்டது போல் திரண்டதையாகிய தோள் பலத்தினால் உன்னுடைய கையிலிருந்த வில்லினால் என்னைய டித்தாய் ஆகட்டும் நீ புமானாலும் இன்னொருதரம் போரப்புங் கெல்ப்பும ஆறியவேணும ஆகையால் மல்லுயுத்தஞ் செயவோம் சேரமவாடா அர்சசுனா.

அர்ச்சுனனுக்கும் வேடனுக்கும் வாது-கண்ணி
இ-ம் சங்கராபரணம் ஆதிதாளம

தலையங்கேயசையாதிருந்தே தாக்கிறேன்
வேடன்சொல்லல்,

தாக்கடாயிதோதாக்கிமார்பிள வாக்கிறேன்
அர்ச்சுனன்சொல்லல்

தோளெங்கேயந்தத்தோள்வலியைநீன் றளக்கிறேன்
வேடன்சொல்லல்,

துணையடாவனைத்தூளுதூளாகப் புடைக்கிறேன்
அர்ச்சுனன்சொல்லல்,

மார்பெங்கேயென்றன்மாபாலடித்துத் தள்ளுறேன்
வேடன்சொல்லல்,

தள்ளடாவுன்னைததள்ளிபற்றிக் கொல்லுகிறேன்
அர்ச்சுனன்சொல்லல்

கையெங்கேயென்தன்கையால்நெருக்கிப் பிடிக்கிறேன்

வேடன்சொல்லல்

பிடியடாபிடித்திழுக்கிபிடிபோ விடிக்கிறேன்
அர்ச்சுனன்சொல்லல்
காலெங்கேமுழங்காலாலோங்கி விடுகிறேன்
வேடன்சொல்லல்.
விடுகாலையெந்தன்காலால்மடக்கி ஓடுகிறேன்
அர்ச்சுனன்சொல்லல்
பாதமங்கேய தப்பற்றியாகாயத்தி லெறியுறேன்
வேடன்சொல்லல்,
எறியடாநீயெறியுஞ்செயலை யறியுறேன்

அர்ச்சுனன்-வேடனுக்குச்சொல் விருத்தம்

அல்லடாவேடாவென்னை யமராகளுலகமட்டுங்
கல்லடாவெறிந்தாறபோலகடிகிநீயெறிந்தாப்போபோ
வில்லடாபயப்படாதே நின்னையிப்போதுவாரி
எல்லடாகடாகமுட்டவெறிகிறேனொடியிறபாராய.

வசனம்

அடாவாடா வேடா என்னைச்சுவர்க்க லோகமட்டுங் கல்லைவிட்டெறிந்தாப்போலேயல்லவோ யெறிந்தாய் உன்னைவாரி அந்த அண்ட கடாகம்போய்முட்டிதட்டி விழத்தக்கதாகநான்யெறிகிறேன் ஓடிப்போகாமல் நில்லடாபார்ப்போம்.

பொது-விருத்தம்

விண்ணுலகம்போல்மீளவர்செழுந்துவருமவிசயன்
விசையைப்பாரதது
கண்ணிதலார்மிகமகிழ்ந்துவேடவடிவங்களாது
காட்சியாகப
பெண்ணொருபாகந்திகப்பிப்மன்முதல்தேவாகளும்
பிரருஞசூழத
துண்ணெனவேவொதிராததுவரும் பாாததன்முன்னெவிடையின்
சைத தோன்றினரோ.

கட்டியன்-வசனம.

அகோ தெப்படி யென்றால், ஆகாயமட்டும்போய் முட்டிக் கீழே விழுந்துமறுபடியும எதிரத்துவரும் அாசசுனன் முன்பாக ரிஷபவாகனரூடாய் காட்சிகொடக்கததக்கதா கப்பரமேஸ்வராவருகிறவிதங்காண். க.

ஈஸ்வரர் வருகிற தரு இம் தோடி-ஆதி தாளம்.

பல்லவி.

பரமேஸ்வரர் வந்தார் — அர்ச்சுனன் கை
பாணத்தடையையுண்டு காணக்கருத்துடன்
பரமேஸ்வரர் வந்தார்

அநுபல்லவி,

கரமான் மழு — துலங்க காளகண்டமிலங்க
கருத்துந்தேவ — ரிணங்க கணமாந்தவாவணங்க
அரவாபரண — மாட
அருமறைகள் கொண் — டாட
அத்தியுரித்திடும் விகதகா — மகிழ்விற
சத்தியுமவாபகத்தினில் — புசபமபற (பரமே)

சரணங்கள்.

சீதமதிநதியுந் திகழ்கொன்றைமுடியினிற
சோதுபிரகா — சிக்கவே வேத்
திட்சதாமறைகளைத் திருத்தமாகச்சொல்ல
தியாரித்துப் — பூசிக்கவே
கோதுநகிளிமொழியை கொண்டமின்னாட வாது — மொன்றாய்
கூடியிசையுடனே பாடிவரவு
ஆடிவரவுங்கொண்டாடி வரவு — நன்றாய (பரமே)

சொல்லரியசதகோடி-சூரியபிரபையில்மலாத
தூராய்களிருநதுமணம — வீசவே-அந்த
தொடுமாலவட்டும் வெண்சாமரையைச
சுழற்றிநதுதிகள்சிலா — பேசவே
எல்லவருங்காட்சி யீகுவாரித்துதி
எனவரவாமன திணங்ினட — திடவதி
கணமுறச்செய்சோ பனநிறை — குணநிதி (பரமே)

சின்னமெநகாளமுடன் செயகண்டிநாககரம்
சிலாடித்தாதி — வரவே கூடத்
திருதொண்டாகள்மகிழ்ச்சி சேருநதவளசசஙகை
சிறந்தாதிமேன்மை — தாவே
மின்னுமவெண்ணிறமுளற-யிடையின்மீதிலேறி
வேதிக்தாவ-நீதபொத — முறை
காமலாகவும் நோதமாக — திநா (பரமேஸ்வரர்)

அர்ச்சுனன் சொல் தோத்திர-விருத்தம்-இராகம் நீலாம்புரி
பரிதிக்கருகின்றாற்போல் வாடிப்பரதவித்தேன்
கருதிக்கருதியொருகதிபுகாதிருக்கின்றேன் கண்ணுதலே
சுருதிப்பொருளே யருட்கடலே தூயசுடரே மணிவிளக்கே
இருவிற்றமியேன் தயவாக்குமே சிவமே வந்து தோன்றாயோ.
இதுவும் அர்ச்சுனன் பரமேஸ்வரனைக்கண்டு சொல்லுகிற

தோத்திரவிருத்தம்,

ஆதியேபோற்றி வேதத் தந்தமே போற்றி ஞானச்
சோதியே போற்றி நாதத் தோற்றமே போற்றி நல்ல
நீதியே போற்றியன்பர் நேயமே போற்றிப் பிரக்கி
யாதியே போற்றி யென்னை யாளுவாய் போற்றி போற்றி.

வசனம்

